விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 05 புதன்கிழமை (21.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பின் பங்கு அவசியம்



## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பில் தீர்வுகாண அமைக்கப்படவுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசியம் பங்கு பற்ற வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை நேற்று செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(விரிவான செய்தி 17ஆம் பக்கத்தில்)

## ஆணைக்குழுவின் அறிக்கைக்கு பொதுநலவாய நாடுகள் வரவேற்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என பொது நலவாய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது. வெளிப்படைத் தன்மையுடன் இலங்கை அரசாங்கம் குறித்த முழு அறிக்கையையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளமை வரவேற்கப்பட வேண்டியது என பொது நலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை அளிக்கப் போவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நாட்டில் சட்டம் ஒழுங்கு முழுமையாக அமுல்படுத்தப்படும் என்ற அரசாங்கத்தின் உத்தரவாதம் பாராட்டுக்குரியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற (02ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் அழைப்பாணைக்கு ஜனாதிபதியின் சார்பில் பதில் மனு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷக்கு எதிராக அமெரிக்காவின் வாஷிங்டன் மாவட்ட நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பில் மகிந்த ராஜபக்சவின் சார்பில் சட்ட நிறுவனம் ஒன்று மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

கடந்த 16ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இம் மனுவில், ஜனாதிபதிக்கு எதிரான போர்க் குற்றவழக்குத் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது கருத்தைத் தெரிவிக்கும் வரை அழைப்பாணைக்குப் பதில் வழங்குவதற்கான காலக்கெடுவை 20 வேலை நாட்களுக்குப் பிற்போடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சட்ட ரீதியான அபிப்பிராயங்களுக்கு ஏற்ப நீதிமன்றங்கள் செயற்படா விட்டால், இவ் விவகாரம் குறித்து தீவிரமாக ஆராயப்படும் என்று இச்சட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி (02ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை குற்றச்சாட்டுக்கான விசாரணைகள் அவசியமானவை

### அமெரிக்கா வலியுறுத்தல்

(வாஷிங்டன்)

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யாத நிலையில் அதற்கு எதிரான விமர்சனங்கள் பல தரப்பினரிடமிருந்தும் எழுந்துள்ளன.

இவ் இறுதி அறிக்கை குறித்து அமெரிக்கா தனது கவலையை தெரிவித்துள்ளதோடு, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு மீது முழுமையான விசாரணை ஒன்றுக்கும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் விக்டோரியா நுலாண்ட் தெரிவிக்கையில்,

நாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் முழு அறிக்கையையும் படித்து வருகிறோம். இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற உண்மையான மனித உரிமை மீறல் மற்றும் சம்பவங்கள் குறித்து அறிக்கையில் கூறப்பட்டுள்ள விதம் தொடர்பில் நாம் கவலையடைகிறோம்.

அரச படைகள் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தியபோது பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாக நல்லிணக்க ஆணைக் (02ஆம் பக்கம் பார்க்க)

## சிறிகொத்தா மீது தாக்குதல் 10 பேர் கைது

(கொழும்பு)

பிட்டே கோட்டேயிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தா மீது நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஐ.தே.க. மேல் மாகாண சபை உறுப்பினர் ஷிரால் லக்திலக மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஹொரண அமைப்பாளரான சட்டத்தரணி ரவி ஜயவர்த்தன உட்பட மேலும் பத்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 20 பேரை பொலிஸார் (02ஆம் பக்கம் பார்க்க)

## சுமார் 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் மழை வெள்ளத்தினால் பாதிப்பு!

### யாழ். செயலக தகவல்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் இதுவரை மூவாயிரத்து 494 குடும்பங்களைச் சேர்ந்த 11ஆயிரத்து 381 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மழை வெள்ளத்தினால் இதுவரை யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவிலும் வேலணை, மருதங்கேணி, காரைநகர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

இதில் (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் விடுதலை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஜனநாயக தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சரத் பொன்சேகாவின் விடுதலை பற்றி நடந்த பேச்சுவார்த்தை குறித்து தனது கணவருடன் பேசவுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா நேற்று கூறியுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அடுத்த மாதம் விடுதலை செய்யப்படவுள்ளதாகசெய்திகள்வந்துள்ளபோதிலும்அவை வெறும் வதந்திகளே என பொன்சேகாவின் மனைவி அனோமா தெரிவித்துள்ளார்.

எனக்கு இது பற்றி யாரும் கூறவில்லை. இது அநேகமாக வதந்தியாகவே இருக்கும் என அவர் கூறினார்.

முன்னாள் இராணுவத் தளபதியின் விடுதலையையிட்டு கடந்த இரண்டு மாதங்களாக (02ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்ற அலுவலக அறையை காலி செய்கிறார் கரு ஜெயசூரிய



(கொழும்பு)

பிரதித் தலைவர் பதவியை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய இழந்துள்ள நிலையில், நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியிலுள்ள தனது அலுவலக அறையை காலி செய்வதற்கு அவர் தீர்மானித்துள்ளதாக நெருங்கிய வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரு ஜயசூரியவின் நிர்வாகப் பணிகளுக்காக இந்த அறை பயன்படுத்தப்பட்டு வந்தது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற வாக்கெடுப்பில் அவர் பிரதித் தலைவர் பதவியை இழந்தார். அவர் தனது அலுவலக அறையை காலி செய்ய தீர்மானித்துள்ள நிலையில், அவரது பொருட்களை பணியாளரொருவர் பொதியிட்டுக் கொண்டிருந்தார்.

பிரதித் தலைவர் பதவியை இழந்துள்ள கரு ஜயசூரிய கட்சியின் செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் வெளியேற நேர்ந்துள்ளது. இதேவேளை, சிறிகொத்தா பகுதியில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் தவறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்றுத்தெரிவித்தார். (ச-5)

# 'ஐ.தே.கட்சியின் பிரச்சினைக்கு நான் தீர்வு கொடுத்திருப்பேன்'

## அமைச்சர் மேர்வின் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா ஒரு தேவாலயம் போன்றது. தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக சிறிகொத் தாவை அடித்து நொறுக்கியது தவறான காரியமே. பிரச்சினை தொடர் பில் என்னிடம் தெரிவித்திருந்தால் நான் தீர்வு கொடுத்திருப்பேன் என்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள அவர், தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சஜித் பிரேமதாச தனது நிலையை தக்க வைத்துக் கொண்டார். ஆனால் தயாசிறி ஜயசேகர பாக்கு வெட்டி இல்லாமல் பாக்கு வெட்ட நினைத்து மூக்குடைபட்டுள்ளார் என்றும் அமைச்சர் மேர்வின் மேலும் கூறியுள்ளார். (எ-11)

# சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் மரணம்

பனையில் ஏறும்போது தவறி விழுந்தவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்.

காரைநகரைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சின்னக்குட்டி அருணகிரி(வயது 41) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் பனையால் விழுந்து படுகாயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மாலை 4 மணியளவில் மரணமானார். (எ-4)

# மனித உரிமை...

குழுவின் 400 பக்க அறிக்கை உறுதி செய்துள்ளது. ஊடக சுதந்திரம், மனித உரிமை மீறல் போன்ற விடயங்களில் நல்லிணக்க ஆணைக்குழு நிலையான பரிந்துரைகளை செய்துள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் முழுமையானவை எனக் கருதாமல் அறிக்கையில் கூறத்தவறிய விடயங்கள் குறித்தும் இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். இலங்கை தம் மீதான குற்றச்சாட்டுகளுக்கு தாமே பதிலளிப்பதுதான் சிறந்து என அவர் மேலும் கூறியுள்ளார். (எ-11)

# அமெரிக்காவின் ...

மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனரான இச்சட்ட நிறுவனத்தை சேர்ந்த விநோதா பஸநாயக்க அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வாஷிங்டன் மாவட்ட நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட அழைப் பாணையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னர் ஏற்க மறுத்திருந்தார்

இதையடுத்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நீதிமன்ற அழைப்பாணை நீதிமன்றத்தின் அனுமதியுடன் மாற்று வழிகளில் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில்அமெரிக்காவின் மாவட்ட நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட அழைப் பாணையை ஜனாதிபதியின் வழக்கறிஞர் ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஆணைக்...

காரணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவர் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பு முழுமையான ஆதரவினை வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# சிறிகொத்தா...

கைது செய்வதற்கான நடவடிக்கைகளைத் தற்போது முன்னெடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகமான சிறிகொத்தா மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் தென் மாகாண சபை உறுப்பினரான மைத்திரி குணரட்ன உட்பட பத்துப் பேர் ஏலவே கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பொன்சேகா...

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தான் பேசி வருவதாக டிரான் அலஸ் ஊடகங்களுக்கு அறிவித்ததையடுத்து இந்த வதந்தி பரவியதாக அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தை நல்ல முடிபுக்கு இட்டுச் செல்லுமா என கேட்டபோது, இதையிட்டு நான் எனது கணவருடன் பேச வேண்டும். அவரே இது விடயத்தில் என்ன நடக்கும் என்பதையிட்டு தீர்மானிப்பார் என அனோமா பொன்சேகா பதிலளித்தார்.

இதேவேளை ஜனாதிபதியின் மனைவி மற்றும் அமைச்சர்கள் சிலரின் வேண்டுகோளுக்கு அமையவும் சனி மாற்றத்தை முன்னிட்டும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி ஆலோசித்து வருவதாகவும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

# மரண அறிவித்தல்



## குணராசா லதீசன்

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும், வைரக்கண்ணி, குருக்கள் வீதி, கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குணராசா லதீசன் 20.12.2011 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமானார். அன்னார் குணராசா சறோஜா தம்பதிகளின் அருமை மகனும் லயன்ராஜ், துஷ்யந்தன், வேணுகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.12.2011 (புதன்கிழமை) இன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5232) தகவல்: குடும்பத்தினர்


**தவறிவிட்டது**

கெங்காதரன் டிசானன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகமும் Transfer formம் நெல்லியடி Townல் தவறிவிட்டது. (Bajaj - Discover Motor cycle - NP- VN 9832 - Motor cycle No) கண்டெடுத்தவர்கள் கீழுள்ள நம்பருடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு : 0772937413 (6994)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1972 ரேவதி M.Sc ஆசிரியருக்கு பெற்றோர் அரச சேவையில் உள்ள (குறைந்தது 5 வயது வித்தியாசம்) மணமகளை எதிர்பார்க்கின்றனர். குடும்ப விபரம், நிழற்படம் TP இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும்.

தொலைபேசி இல- 077 6660365 (6996)

**வீடு விற்பனைக்கு**

யாழ் நகரின் மத்தியில் பாடசாலைகள், வைத்தியசாலை என்பனவற்றிற்கு அண்மையில் அப்பலோ ஆஸ்பத்திரிக்கு முன்பாக பலாலி வீதி பருத்தித்துறை வீதி என்பவற்றிற்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு வாகன தரிப்பிட வசதியுண்டு.

தொடர்புகளுக்கு:-

077 8767947, 021 5670238

1/13, 2ம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (6995)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

சர்வதேச மொழியான French மொழியை எவரும் இலகுவாக கற்றுக் கொள்ளலாம்...

6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.

வகுப்புகள்: சனி,ஞாயிறுகளில்....

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (7001)

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093

E-mail: alliancejaffna@yahoo. com

(ரக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.

**சாவகச்சேரியில்**

20% தள்ளுபடியுடன்

**மாபெரும்**

மலிவு விற்பனை

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெண்களுக்கான அழகிய சல்வார், சாறி, கொட்டன் சாறிகள் சிறுவர்களுக்கான ஆடைகள்

**மரியம்'ஸ்**

பெண்களுக்கான பெருமை மிகுந்த' ஆடையகம்

இடம் : "கலா காமெண்ட்" 16A, கண்டி வீதி, சாவகச்சேரி. (கொமஸியல் வங்கி அருகில்)

திகதி : 20.12.2011 தொடக்கம் 31.12.2011 வரை

நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

5000/= இற்கு அதிகமாக கொள்முதல் செய்தால் 800/= பெறுமதியான அழகிய With பிளஸ் கொட்டன் சாறி Free

தொடர்புகளுக்கு : 0777140844, 0718034848 (6998)

# இன்று ஒரு தகவல்

## தவறு செய்யுங்கள்

ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் நின்று கொண்டே யோசனை செய்தார்.

''என்ன யோசனை'' என்று அருகில் நின்றவர் மெதுவாகக் கேட்டார்.

எப்படி எழுந்திருப்பது என்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன்.

ஏற்கனவே நின்று கொண்டிருப்பவர் எப்படி எழுந்திருக்கிறது என்று யோசனை செய்கிறாராம். இது எப்படி இருக்கிறது.

கீழே விழுந்தால்தானே எழுந்திருக்க முடியும்? அதனால் அவர் முதலில் கீழே விழ வேண்டும். அதன்பின்னர் தான் அவர் எழுந்திருக்க முடியும்.

இந்த உலகில் நடப்பதற்கு கற்றுக் கொள்வதற்கு முன் கீழே விழாத மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா? விழுந்து புரண்டு எழுந்துதானே நடக்கக் கற்றுக் கொள்கிறார்கள்.

நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான உண்மை ஒன்று உள்ளது. அது உலகத்திலே தவறு செய்யாத மனிதர்களே கிடையாது என்பதாகும்.

அதனாலே எப்போதாவது உங்கள் வாழ்க்கையிலே தவறு செய்தால் அப்படியே மனம் உடைந்துபோய் அதில் மூழ்கி இருந்துவிடக்கூடாது.

ஒரு தவறு நடந்து போனால், அதை ஒரு பாடமாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதே தவறு மறுபடியும் நடக்காதவாறு நாம் அவதானமாக இருக்க வேண்டும். தடைக்கல்லை படிக்கல்லாக் மாற்றி அமைக்க வேண்டும்.

ஒரு அலுவலகத்தில் உயர் அதிகாரியொருவர் சிறந்த நிர்வாகியென்று புகழப்பட்டவர். அவர் தனக்குக் கீழே பணிபுரிகிறவர்களிடம் என்ன சொல்வார் தெரியுமா?

இந்த நிறுவனத்தில் நீங்கள் எத்தனை தடவை வேண்டுமென்றாலும் தவறு செய்யலாம். ஆனால், ஒரு விடயம், ஒரே தவறை மறுபடியும் செய்யக்கூடாது என்று கூறினார்.

இன்றைய காலத்தில் நடப்பது என்ன தெரியுமா? அநேகமாக எல்லா மனிதர்களுமே ஒரே தவறைத்தான் மறுபடியும் மறுபடியும் செய்கிறார்கள்.

விளையாட்டு வீரர்கள் ஒரேமாதிரியான தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்வதுண்டு.

சோம்பல், ஞாபகமறதி, கவனக்குறைவு, தன்னுடைய திறமை மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை இப்படி இதிலே ஏதாவது ஒரு காரணமாக இருக்கலாம்.

ஒருதடவை செய்த த்வறை மறுபடியும் செய்வதில்லை என்று முடிவு எடுக்கும்போது வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

ஒருவர் தன்னுடைய இரண்டு காதிலேயும் கட்டு (பண்டேஜ்) போட்டுக் கொண்டு வந்தார். என்ன சேர் நடந்தது என்று விசாரித்தேன்.

''ஒன்றுமில்லை சேர்... வீட்டில் மிகவும் ஆர்வமாக தொலைக்காட்சியில் கிரிக்கெட் விளையாட்டு பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது என் மனைவி துணிக்கு அயன் செய்து கொண்டிருந்தாள். அயன் பொக்ஸை அப்படியே வைத்து விட்டு சமையல் அறைக்கு சென்று விட்டாள். அவ்வேளையில் கையடக்கத் தொலைபேசி மணி ஒலிக்க ஆரம்பித்தது. அவசரமாக ஓடிப்போய் அதை எடுத்துக் காதிலே வைத்துவிட்டேன். அப்போதுதான் தெரியும் அது அயன் பொக்ஸ் என்பது சூடாக இருந்ததா? சுட்டு விட்டது என்றார்.

''ஒரு காது சரி சேர்... மற்றைய காதும் ஏன் சேர் அப்படி இருக்கிறது?'' என்றார்.

அதே ஆள் மறுபடியும் தொலைபேசியை அழைத்தார். மீண்டும் அதே தவறை செய்துவிட்டேன்.

தவறு செய்தால் திருந்தி நடக்க முயற்சிக்க வேண்டும். அதுதான் செய்த தவறிலிருந்து திருந்துவதற்கு ஒரு வழியாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தனிச்சிங்களத்தில் அனுப்பப்படும் சுற்றுநிருபங்களுக்கு எந்தவித பதிலும் அளிக்கத்தேவையில்லை

## அமைச்சர் வாசுதேவ அரச அதிபருக்கு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தனிச் சிங்களத்தில் அனுப்பப்படும் அரசாங்க சுற்றுநிருபங்களுக்கு எந்தவித பதிலும் அளிக்கத் தேவையில்லை என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தமக்கு தெரிவித்ததாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 18 ஆம் திகதி உறவுப் பாலம் என்னும் நிகழ்வு நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.அரச அதிபர் அலுவலகங்கள், திணைக்களங்களுக்கு அமைச்சர்களினால் அனுப்பப்படும் கடிதங்கள் மற்றும் சுற்றுநிருபங்களை தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அனுப்பி வைக்கக்கூடிய நடவடிக்கைகளை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அத்தோடு தனிச் சிங்களத்தில் அரசாங்க சுற்றுநிருபங்கள் மற்றும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுவதனால் இங்குள்ள அரச அதிகாரிகள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்கின்றனர்.

இதனால் கடிதங்கள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கு உரிய பதிலை அனுப்ப முடியாத நிலையிலும் உள்ளனர் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தமக்கு தனிப்பட்டரீதியில் பதிலளித்ததாகவும் அதில் அரசாங்க சுற்றுநிருபங்களை அமைச்சர்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கும்போது அதற்கு பதிலளிக்கத் தேவையில்லை எனவும் அவ்வாறு தனிச் சிங்களத்தில் சுற்றுநிருபங்களை அனுப்பி வைக்கும் அமைச்சர்கள் தொடர்பாக தமக்கு அறியத்தருமாறும் அமைச்சர் தெரிவித்ததாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார்,

(அ-6)

## பயிற்சிப் பட்டறை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் தமிழ்பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமான நாடகம் மற்றும் கூத்துக்கலைகளின் பயிற்சிப். பட்டறை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்தின போட்டியை முன்னிட்டு இப்பயிற்சிப்பட்டறை நடைபெறுவதால் அனைத்து தமிழ்பாடம் கற்பிக்கும்ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (அ-3-15)

## திகதி மாற்றம்

நல்லொழுக்க முன்னேற்ற நிலையம் என்ற சமூக சேவை நிறுவனத்தால் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள பாடசாலை உபகரண அன்பளிப்பு பொதி காலநிலை மாற்றத்தாலும் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை நடைபெறுவதாலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வழங்கப்படுமென அதிபர் ப.இரவீந்திரநாதன் அறிவித்துள்ளார். மேற்குறித்த அன்பளிப்பு பொதி இன்று வழங்கப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (அ-3-15)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 80-120 | 70 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 300 |
| தக்காளி | 150 | 190 | 160 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 80 | 120 | 100 |
| பூசணி | 65 | 70 | 60 |
| புடோல் | 50 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 70 |
| பாகற்காய் | 110 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 50-70 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 50 | 80 | 100 |
| பீற்றூட் | -- | 120 | 140 |
| கறிமிளகாய் | 160 | 180 | 160 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 100 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10-15 | 50 | 20 |
| தேசிக்காய் | 120 | 170 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 20-25 | 25 | 25 |

## இராசி பலன்

*21.12.2011*
*(மார்கழி 5, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு*
*ஏகாதசி காலை 08.10 மணிவரை*
*சுவாதசி பிற்பகல் 1.49 மணிவரை*
*இராகுகாலம் 12.54-1.24 மணிவரை*
*சுபநேரம் 4.54-6.24 மணிவரை*
*ஏகாதசி விரதம்.*

**மேடம்** பொன்னான நாள்,கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், உடல் நலம் சீராகும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், பொருள் வரவுகள் திருப்திகரமாக அமையும்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரும் நாள்,உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்,இல்லத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் தோன்றும்.

**மிதுனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள்.

**கடகம்** தொல்லை கொடுத்தவர்களே உதவி செய்ய முன்வரலாம்,மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான அறிகுறி தோன்றும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும்.

**சிங்கம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள்,தொழில் சம்பந்தமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**கன்னி** பணியாளர் தொல்லை அகலும், தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழி ஒத்துழைப்புக் கிடைக்கும்,இனிய தகவல்கள் வந்து சேரலாம்,வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும்,ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்,பெரிய மனிதர்களின் சந்திப்புக்கு இடமுண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்,கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்,பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் பக்கபலமாக இருப்பர்.

**தனுசு** தித்திக்கும் செய்தி வந்து சேரும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், இலட்சியப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், புகழ் கூடும்.

**மகரம்** செலவுக்கேற்ப பணம் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களில் அதிக நாட்டம் காட்டுவீர்கள், எதிர்பாராத நேரத்தில்/பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கும்பம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்,நேற்றைய பணியொன்று இன்று தொடரலாம், தந்தை வழி உறவினர்களால் ஏற்பட்ட மனக்கசப்புக்கள் மாறும்.

**மீனம்** வரவும் செலவும் சமமாகும், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, அலைச்சல்கள் அதிகரிக்கும், குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டு விலகும்.

வளவன்

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிக்க குடும்ப வறுமையே காரணம்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது சமுதாயத்தில் பெண்கள் புறக் கணிக்கப்படுகின்றனர். பெண்கள் பாலியல் நுகர்பொருளாக பார்க்கப்படுகின்றனர். ஜன நாயகம் மிக்க நாட்டில் பெண்கள் மீதான வன்முறைகளை வளர்ப்பதற்கு ஊடகங்கள் ஒத்துழைப்பது எமக்கு அவமானத்தை தரு கின்றது என யாழ். அரசாங்க அதிபர் தெரி வித்தார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய சட்டங்கள் தொடர்பான கருத்தரங்கு தியாகி அறக்கொடை நிதியத்தின் சொர்ணாம் பிகை மண்டபத்தில் அண்மையில் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில்,

யாழ்ப்பாணத்தில் பெண்கள் பிரச்சினை பெரிதாகவுள்ளது. தினமும் எனது அலுவல கத்துக்கு பாதிக்கப்பட்ட பெண்கள் வந்து கொண்டு இருக்கின்றனர். கடந்த வாரத்தில் மட்டும் 5 முறைப்பாடுகள் பெண்கள் சம்பந் தமாக கிடைக்கப்பெற்றுள்ளன.

நான் இவ்வளவு .காலமாக கற்ற கல் வியை விட கடந்த ஒன்றரை வருடங்களில் யாழ்ப்பாணத்தில் பெண்கள் மீதான வன் முறைகள் குறித்து நிறையவே கற்றுக் கொண்டுள்ளேன்.

எமது சமுதாயம் மிகவும் பரிதாபகரமாக காணப்படுகின்றது. குடும்பத் தலைவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். இதனால் அவர் களது பிள்ளைகள் கட்டுப்பாடின்றி வளர்ந்து வழி தடுமாறிச் செல்கின்றனர்.

பெண்கள் மீதான வன்முறைகளுக்கான பிரதான காரணம் வறுமை, கிராம சூழலுமே. கல்வியறிவு இல்லாமையினால் அவர்களை இலகுவில் ஏமாற்றி தமது இச்சையை தீர்த் துக் கொள்கின்றனர். இந்நிலையில் பெண் கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் இளம் பெண்களின் கருத்தரிப்புக்கள் சாவகச்சேரி, பருத்தித் துறை, ஊர்காவற்றுறை, யாழ்.பட்டணப்ப குதி ஆகிய இடங்களிலேயே அதிகமாக இடம் பெறுவதாக புள்ளிவிபரங்கள் குறிப்பிடு ன்றன.

தை தொடக்கம் கார்த்திகை வரையான காலப்பகுதியில் 120 திருமணமாகாத கருத் தரிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இது பெண் வன்முறைகளின் உச்சத்தை காட்டுகின்றது.

சிறு தவறுகள் ஏற்படும் போது அவற்றை பெரிதாக காட்டி சர்வதேச மட்டத்தில் யாழ். மாவட்டத்தை இழிவாகக் காட்டுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அவர்களின் முயற்சி களை முறியடிக்க முற்பட வேண்டும்.

பெண்களுக்கு கருத்து சுதந்திரம் பறிக்கப் பட்டுள்ளது. பெண்களால் சொல்லப்படும் விட யங்கள் திரிபுடுத்தப்படுகின்றது. இப்போது பெண் கள் பல உயர் பதவிகளில் காணப்படுகின்றார் கள். இது கூட சிலருக்கு கசக்கின்றது.

ஒரு விடயத்தை ஊதிப் பெருப்பிப்ப தைவிட அவ்விடயத்திற்கு தீர்வு காணப்படு வதே அவசியம் என அவர் மேலும் தெரி வித்தார். (அ-4)

# சந்தேகநபர்கள் பொலிஸில் சரண்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட வயோதிபர் படுகாய மடைந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்றிருந்தது.

இச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவந்த இரு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் நெல்லியடிப் பொலி சாரிடம் சரணடைந்தனர். (அ-2)

# உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான கரவருட விநாயகர் விரத உற்சவம் கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

இவ்விரதம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, பஞ்சமுக அர்ச்சனை என்பன இடம்பெற்று வருகின் றது என கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ் தானம் அறிவித்துள்ளது. (அ)

யாழ்.செய்திகள்


# கலைவட்டத்தினால் ஓவியக்கண்காட்சி

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலை வட்டத்தின் ஏற்பாட்டில் சித்திரமும் வடிவமைப்பும் அலகின் நான்காம் வருட மாணவர்களின் முகிழ்-2011 ஓவியக்கண் காட்சி இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணி க்கு யாழ். பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா சிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து ஆரம் பித்து வைக்கவுள்ளார். இக் கண்காட்சியானது தொடர்ச்சியாக இரு தினங்கள் காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரையும் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் காட்சிப்படுத்தப்படும் படைப்புக்கள் யாவும் சித்திரமும் வடிவமைப்பும் இறுதியாண்டு மாணவர்களினால் யாழ்.பல் கலைக்கழக கலையகத்தில் உருவாக்கப் பட்டவை என நுண்கலைத்துறை கலை வட் டம் அறிவித்துள்ளது. (அ-2)

# தனியார் பேருந்துகள் விபத்து; பயணிகள் மயிரிழையில் தப்பினர்



(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் மானிப்பாய் சுழாவடி இராணுவ முகாமுக்கு அருகாமை யில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மாதகலிலிருந்து யாழ். நகர் நோக்கி வந்து கொண்டிருந்த இரண்டு தனியார் பேருந்துகள் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்துக்குள்ளானது.

அதிர்ஷ்டவசமாக இரண்டு பேருந்து களிலும் பயணித்த பயணிகளுக்கு காயங் கள் எதுவும் ஏற்படவில்லை.

இருப்பினும் இரண்டு பேருந்துகளும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

மேலும் முன்னாள் சென்ற பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட பேருந்தின் பிறேக் துண்டிக்கப்பட்டதனால்தான் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக குறித்த பேருந்தின் ஓட்டு நர் தெரிவித்தார்.

இருப்பினும் தனியார் பேருந்துகள் இவ் வாறு அடிக்கடி விபத்துக்குள்ளாவது குறிப் பிடத்தக்கது.

குறித்த விபத்து தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-6)

# நீதிமன்றத்தால் அபராதம்

(சாவகச்சேரி)

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் சாவ கச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைதினம் சாவகச்சேரி நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீத வான் நீதிமன்ற பதில் நீதவான் செ. கண பதிப்பிள்ளை குறித்த நபர் மன்றில் குற்ற த்தை ஒப்புக்கொண்டமையால் ஆயி ரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண் டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3-29)

# வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஹாட்லிக் கல்லூரி பழைய மாண வர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர் வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வருகைதரவிரும்புவோர் கள் தங்கள் பதிவினை முன்கூட்டியே உறுதி செய்து கொள்ள 0774694262, 0777601018, 0776688182, 077 5935371 என்னும் இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துமாறு பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (அ)


Yarlpanam Festival PONGAL 2012

தமிழர்களின் கலை கலாசார பாரம்பரியங்களைப் பறைசாற்றும்

## யாழ்ப்பாணத் திருவிழா பொங்கல் 2012

2012 தைத்திங்கள் 11 முதல் 15 வரையில்

போட்டிகள் – பொழுது போக்கு நிகழ்வுகள்
கலை நிகழ்ச்சிகள் – வர்த்தக சந்தை

**கலை, பொதுப் போட்டிகள்**
பாட்டுப் போட்டி
நடனப்போட்டி
தமிழன், தமிழிச்சி தெரிவுப் போட்டி
பொங்கல் போட்டி

**விளையாட்டுப் போட்டிகள்**
மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம்
நீச்சல் போட்டி, கிளித்தட்டு
வள்ளம் தாங்கல் போட்டி
தயிர் முட்டி உடைத்தல்
மாட்டு வண்டிச் சவாரி
கிறீஸ் மரம் ஏறுதல்

- போட்டிகளில் ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொள்ளலாம்
- விண்ணப்பப் படிவத்தை யாழ் மாநகரசபை கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.
- விண்ணப்பப் படிவம் 100 ரூபா. தபால் மூலம் உரிய கட்டணம் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம்
- பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 31-12-2011க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணத் திருவிழா – பொங்கல் 2012
கலாசாரப் பிரிவு, யாழ் மாநகரசபை

மேலதிக விபரங்களுக்கு: தொ.பே: 021 222 2275

**கலை நிகழ்ச்சிகள், வர்த்தக சந்தை**
யாழ்ப்பாணத் திருவிழா: பொங்கல் 2012 நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள், புத்தாக்க முயற்சிகளை வழங்க விரும்புவோர் மற்றும் வர்த்தக சந்தையில் பங்குபெற்ற விரும்பும் வர்த்தகர்கள் யாழ். வர்த்தகர் சங்கம் மூலமாக அல்லது Ashokavatika Holidays, இல. 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் தொ.பே.: 0759 360 370 உடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

ஏற்பாட்டுக் குழு

# இலங்கையை பற்றி தெரியாதவர்களால் தயாரிக்கப்பட்டதே தாருஸ்மான் அறிக்கை

## பிரதமர் தெரிவிப்பு

மன்னர்கள் வயலுக்குள் இறங்கி வேலை செய்தனர். நாட்டை முன்னேற்றுவதற்கு படையினர் உட்பட மக்கள் தங்களை அர்ப்பணிக்கின்றனர். அதேபோல மக்கள் பிரதிநிதிகளும் வயல்களுக்குள் இறங்கி தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று பிரதமர் தி.மு.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

படையினரை சகல துறைகளிலும் ஈடுபடுத்த வேண்டும். அதில் தவறு இருக்காது என்பதுடன் மரணமடைந்த வீரர்களை விளக்கேற்றி அஞ்சலி செய்கின்றோம் என்றும் அவர் சொன்னார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரச்சினை பற்றி ஒருவர் அல்லது ஒரு குழுவினர் நினைப்பது மட்டும்தான் சரியென்று நினைத்து அதன் பிரகாரமே நடக்க வேண்டும் என்றால் அதில் ஜனநாயகம் இல்லை.

இறுதி யுத்தத்தின் போது இராணுவத் தளபதி இல்லாமல் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக ஐ.தே.க.வின் எம்.பியான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். அப்படி பார்க்கும் போது இராணுவத்தளபதி ஒருவர் இல்லாமலே 30 வருட யுத்தத்தை ஜனாதிபதியால் முடிவுக்கு கொண்டுவர முடிந்துள்ளது. இது விசேடமானதொரு விடயமாகும்.

அத்துடன் பொதுப்பணிகளில் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொழில்சார் ரீதியிலே அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களுடன் பொதுமக்களும் இணைத்து கொள்ளப்பட்டுள்ளனர்.

எமது நாட்டை பற்றி வெளிநாடுகளுக்கு சென்று கூறியமையால் தான் தாருஸ்மான் அறிக்கை வெளியானது .இலங்கையை தெரியாதவர்கள் இலங்கை காற்றை சுவாசிக்காதவர்களே. இந்த அறிக்கையை தயாரித்துள்ளனர்.

எனினும் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையை பற்றியும் அதன் பின்புலன் தொடர்பிலும் நன்றாக தெரிந்தவர்களினாலே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலம் குறித்தும் பரிந்துரைத்துள்ளனர். அதன் பிரகாரம் எதிர்கால வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அதற்கு ஜனாதிபதி தயாராகவே இருக்கின்றார்.

ஒருவர் இன்றேல் ஒரு குழுவினர் மட்டுமே கூறுவதை செய்யமுடியாது. அப்படி செய்தால் அதுவா ஜனநாயகம். ஒருவரோ ஒரு குழுவினரோ கூறுவதனை செய்யமுடியாது என்பதுடன் சகலரும் கலந்து பேசியே பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றார். (அ-2)

## நேர்முகப்பரீட்சை

துணுக்காய் வலயக்கல்வி திணைக்களத்தின் ஊடாக் ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்தோருக்கு நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்கள் தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளதெனவும் கடிதம் கிடைக்காதோர் துணுக்காய்வலயக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# ஆணைக்குழுவின் அறிக்கை நம்பகத்தன்மை உடையது

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை வெளிப்படைத்தன்மையானது. தாருஸ்மான் அறிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை மிகவும் வெளிப்படையானது என வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாருஸ்மான் அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாக பல போலிக் குற்றச்சாட்டுக்களை தாருஸ்மான் அறிக்கை முன்வைத்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

பக்கச்சார்பற்றதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான முறையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தாருஸ்மான் அறிக்கையின் ஆதாரங்கள் நம்பகத்தன்மையற்றவை. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பாவி பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்திக் கொண்டனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறான ஓர் பின்னணியில் படையினர் புலிகளுடன் போராட்டம் நடத்தினர் என்பதனை புரிந்து கொண்டு விமர்சனங்களை முன்வைக்கவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

(யோகபுரம்)

யோகபுரம் மகாவித்தியாலயத்தின் பொன் விழா எதிர்வரும் ஆண்டில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வின் போது வெளியிடப்படும் பொன்விழா மலருக்கான ஆக்கங்கள் பாடசாலை நிர்வாகத்தால் எதிர்பார்க்கப்படு கின்றன. இதற்கு கல்விமான்கள், சமூகப் பெரியோர்கள், சமூகசேவையாளர்கள் புலம் பெயர்நாடுகளிலுள்ள பாடசால்லயின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

இவ் ஆக்கங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர் மு/யோகபுரம் மகா வித்தியாலயம், யோகபுரம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர் வை .யோகராஜா கேட்டுள்ளார். (அ)



# மாணவர்களது கல்விக்கு தடங்கலாக பல சமூகப் பிரச்சினைகள் உள்ளன

## வவு.வடக்கு கல்விப் பணிப்பாளர்

(வவுனியா)

ஏனைய வலயத்திலுள்ள மாணவர்களை விட வவுனியா வடக்கைச் சேர்ந்த மாணவர்கள் அதிக துலங்கக் கூடிய ஆற்றலைக் கொண்டவர்கள். ஏனைய பகுதி மாணவர்களுக்கு பல பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஆனால், இப்பகுதி மாணவர்களுக்கு குறைவான பயிற்சிகளே வழங்கப்படுகின்ற போதும் அதனை அப்படியே உள்வாங்கக் கூடிய ஆற்றல் உள்ளதென வவுனியா வடக்குக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் கூறினார்.

வவுனியா கனகராஜான் குளம் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் துன்பப்பட்டு உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட போதும் எமது சமூகம் வறுமையிலும் கல்விக்கு முக்கியத்தும் கொடுத்து கல்வியை தமது பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என்பதில் அயராது உழைத்து வருகின்றது. ஆகையினால் இன்று கல்விப் புலம் சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது.

மாணவர்களது கல்விக்கு தடங்கலாக பல சமூகப் பிரச்சினைகள் உள்ளன. ஆசிரியர்களும் கல்வி கற்பிப்பதிலும் பல தடைகள் உள்ளன. ஆனால், இந்தத் தடைகள் எல்லாவற்றையும் உடைத்து எறிந்து மன வலிமையால் உழைப்போமானால் தான் நாம் கல்வித்துறையிலே பல படிகளிலே முன்னேறுவோம்.

என் வாழ்நாளில் கல்வி எவ்வளவு முக்கியமானது என சிந்திக்க வேண்டும். மாணவர்களின் வளர்ச்சிதான் எங்களது எதிர்கால வளர்ச்சி. ஆகவே, கல்வி கற்பதில் ஆர்வமாகவும் பாடசாலையை கோயிலாகவும் கருதி செயற்பட வேண்டும் என்றார். (அ-2)

# இலங்கை செல்லாதீர்கள்; சுவிஸ் தமிழர் போராட்டம்

உல்லாச பயணிகள் இலங்கை சென்று விடுமுறை களிப்புக்களை மேற்கொள்ளலாம் என்று சுவிஸின் சுற்றுலாத்துறை நிறுவனங்கள் விளம்பரங்களை மேற்கொண்டு வந்தன.

இச் செயற்பாட்டை புறக்கணித்து துளிகள் இளையோர் செயற்பாட்டினர் கண்டனப் போராட்டத்தை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டனர். இச்செயற்பாட்டை முன்னெடுத்த இளையோர்கள் சீரற்ற காலநிலை யையும் பொருட்படுத்தாது தாயக மக்களின் நிலையை அறிந்து தமது கடமைகளில் அக்கறை கொண்ட தமிழ் மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

போராட்டம் தாக்கங்களை தோற்றுவிக்கலாம் என எண்ணி பொலிஸார் குவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இளைஞர்கள் திட்டமிட்ட முறையில் அமைதியாக மேற்கொண்ட கவனயீர்ப்பானது பொலிஸார் அச்சத்தை கலைத்தது. குறிப்பாக மாலை வரை அங்கு இருந்த விளம்பரங்கள், கைநூல்கள் அனைத்தும் அகற்றப்பட்டன. (அ-2)

# தெற்கு அதிவேக சாலையில் சொகுசு பஸ் சேவை

(கொழும்பு)


தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அடுத்த வருடம்முதல் சொகுசு பஸ்சேவை இடம் பெறுமென தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் செயற்பாடுகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் பி.டி.கே.பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துசபைக்கும் இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் இடையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்து சபையும் முதற்கட்டமாக 48 ஆசனங்களை கொண்ட 4 பஸ்களை வழங்கவுள்ளதாகவும் பி.டி.கே. பண்டார குறிப்பிட்டுள்ளார்.

பயணிகள் கோரிக்கைக்கு அமைய காலியிலிருந்து கொட்டாவ வரையான நுழைவாயிலுக்கு பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக பேருந்துகள் ஒழுங்குபடுத்தப்படும் எனவும் அவர் கூறினார். (அ-2)

# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்



அன்புடையீர்!

அமரர் ஆ.சி.நடராஜா அவர்களின் மரணச் சடங்கு நிகழ்வில் சகல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களைப் பிரசுரித்தவர்களுக்கும் மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து மலர்வளையங்களை உடன் அனுப்பியவர்களுக்கும் உள்ளூர்களிலும், புலம்பெயர் நாடுகளிலும் அஞ்சலி நிகழ்வுகளை நடாத்தியவர்களுக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

(சி-525)

# நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவு

## அமரர் தேவராசா கேதீஸ்தரன் (தீசன்)

(குடத்தனை கிழக்கு, பருத்தித்துறை)

மண்ணின் மடியில் 1983 . 12 . 03



விண்ணின் பிடியில் 2010 . 12 . 31

ஈராறு மாதங்கள் ஆன போதும்
சோராது உனைத்தேடுகின்றோம் காணமுடியல
நேற்றுப்போலுள்ளது உன் பேச்சு–இன்று வரை
காற்றுக்கூட அமைதியானது உன் மூச்சின்றி

கட்டழகான உன் உடல் தோற்றம் –சற்றும்
விட்டகலாத உன் ஊர்ப்பற்று
தொட்டுணரமுடியா உன் நட்பு வட்டங்கள் யாவும்
பட்டுப்போனதேன் விதியா? நம்பமுடியல

அன்பினை சொரிந்து அரவணைத்து நீ வளர்த்த உன்னவள்
மூச்சடங்கி யாரினதும் அன்பின்றி பேச்சிழந்து போகிறாள்
காற்றுமட்டுமே நேற்று வரை அவளின் துணை–தன்
மூச்சுள்ளவரை காத்திருக்கிறாள் உன் வரவுக்காக

பத்துமாதம் உனைச்சுமந்தவள்
சத்தமேதுமின்றி செத்துப்போகிறாள் தினமழுது
சொல்லாமல் சோதியினுள் நீ கலந்ததேனையா? அங்கு
நில்லாது மீண்டுமொருமுறை எழுந்து வாராயோ? எம்முன்

உனை மணந்தவள் உனை சுமந்தவள்
உனதுறவுகள் உனதூரார் எல்லோரும்
நினைவிழந்து நிர்க்கதியானோம் உனையிழந்து
ஆண்டுகள் ஆண்டாகிப் போனாலும்–நம்
வேண்டுதல் எல்லாம் எம் தெய்வமான தீசா– நீ
மீண்டுமொருமுறை எம்முடன் நடைபயிலணும்.

(6979)

தகவல்:

மனைவி, தாய், சகோதரர்கள்.

# சங்கடங்கள் தீர்க்கும் சகுனங்கள்

✷ காகிதப் பூக்களை இயன்ற வரை வீட்டில் வளர்க் காமல் இருந்தால் நல்லது. அதாவது செடியில் தான் பூ பூக்கும். ஆனால் அதைப்பார்த்தால் காகிதப்பூ போல இருக்கும். வீட்டில் அந்தப் பூச்செடி இருந்தா லும் அதை வீட்டின் வாசலுக்கு நேராக வளர்க்கக் கூடாது. நறுமணம் இல்லாத பூக்களை வாசலுக்கு நேராக வைக்காமல் நறுமணம் தரும் பூச்செடிகளை வாசலுக்கு நேரில் வைத்தால் நன்மைகள் அதிகம் ஏற்படும். தினமும் அதைப் பார்த்துச் செல்வதால் அதுவும் சுப சகுனம்தான். தெய்வங்கள் நம் வீட்டிற்கு விருந்தினர்கள் போல் வருவதாக சாஸ்திரம் சொல் கின்றது. அப்படி தெய்வங்கள் வரும் போது வாச னையே இல்லாத காகிதப் பூக்களை வரவேற்பது போல் வைப்பதைவிட வாசனையான பூச்செடி களைவளர்த்தால்நன்மைகளைநாம்தேடிச் செல்ல வேண்டாம். காந்தத்தை தேடி இரும்பு வருவது போன்று நன்மை கள்தாமாகவேநம்மைத்தேடிவரும்.





✷ தோஷங்கள் நீக்கும் சக்தி, தயிருக்கு இருக்கிறது. எப்படிப் பட்ட தோஷமும் நீங்கும். இலாப மும் ஏற்படும். வெள்ளிக்கிழமை களில் தயிர் வாங்கி வந்தால் சுபீட்சம் உண்டாகும். அதேபோல் காலையில் வெளியே புறப்படும் போது வெறும்வயிற்றோடுபுறப்படக்கூடாது. சிறிதளவாவது உணவு அருந்தி விட்டுத்தான் புறப்பட வேண்டும். அது முடியாவிட்டால் தயிரையும் சீனியையும் கலந்து சாப்பிட்டுவிட்டு புறப்பட்டால் நம் உடலில் எந்த தோஷமும் அண்டாது. போகும் வேலை சுலபமாக சுபமாக நடக்கும். வெளியூர், வெளிநாடு புறப்படும் போதும் இதைச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பி னால் இலக்சுமி கடாட்சம் ஏற்படும்.

தினமும் கூட இப்படிச் செய்யலாம். செய்து பாருங் கள். சில நாட்களிலேயே உணர்ந்து கொள்வீர்கள். உங்களின் ஏற்றத்தை. அதற்காக உடனே யோகம் வர வேண்டும் என்ற ஆசையில் சீனியையும் தயிரையும் மொத்தமாக கலந்து ஒரே நாளில் குடித்தால் பலன் இல்லை. பொறுமையுள்ளவனே பாக்கியசாலி என்ற பெரியோர் களின் சொல்லுக்கேற்ப தினமும் காலையில் ஒரு கரண்டி தயிரும் சீனியும் சாப்பிட்டு வந்தாலே போதும். நிச் சயம் யோகத்தை அனுபவிப்பீர்கள். இது சுப சகுனமும் கூட.

✷ இயந்திரத்தில் அரைத்த மாவை யாராவது எதிரே கொண்டு வந்தால் அந்த நாள் அலைச்சல் நாளாகத் தான் இருக் கும். வீண் பணவிரயம் ஏற்படும். பரிகாரமாக வீட்டிற்குள் வந்து இறைவனை வணங்கிவிட்டு செல்லலாம். காலை யில் எந்தப் பொருட்களும் வாங்காமல் முதலில் அரிசிமாவை வாங்கக் கூடாது. ஏதாவது வேறு பொருளோ. மஞ்சளோ அல்லது குங்குமமோ வாங்கி விட்டுத்தான் அரிசிமா வாங்க வேண்டும்.

✷ **பாலை** யாராவது எதிரே கொண்டு வந்தால் நல்ல சகுனம். மன சங்கடங் கள் தீரும். எதிர்பார்த்த காரியம் கை கூடும். காலை வேளையில் பாலை இறைவனுக்குரிய அபிஷேகத்திற்கு கொடுத் தால் உடல் உபாதைகள் நீங்கும். வீட்டில் இருக்கும் தரித்திரமும் வெளியேறும். அதுவும் உங்கள் வீட்டில் சிறிது நேரம் வைத்திருந்து விட்டு ஆலயத்திற்கு எடுத்துச் சென்றால் இல்லத் தில் சந்தோஷம் ஏற்படும். வெள்ளிக் கிழமையில் பால் சிந்தக்கூடாது.

ஆனால் பொங்கி வழியலாம். காலையில் முதன் முதலில் அடுப்பில் வைக்கும் போது புதுப் பாலைத்தான் வைக்க வேண்டும். அதாவது காய்ச்சாத பாலாக இருக்க வேண்டும். முந்தைய நாள் காய்ச்சிய பாலை அடுப்பில் வைத்தால் சில நேரத்தில் அந்தப் பால் கெட்டுவிடவும் வாய்ப்பு இருக்கின்றது. காலையில் வைக்கும் பால் கெடாமல் பொங்க வேண்டும்.



✷ **வெண்ணையை** எவரேனும் எதிரே கொண்டு வந்தால் அந்த நாள் இனியநாளாக இருக்கும். மனதில் மகிழ்ச்சியும் தன இலாபமும் ஏற்படும். விரோதிகளும் நண்பர்களாவார்கள். வெண்ணையை வியாழக்கிழமை களில் ஆஞ்நேயருக்கு சாத்தினால் கிரக தோஷங்கள் குறிப்பாக சனிதோஷம் நீங்கும். சனிக்கிழமைகளில் கிருஷ்ணர் கோயிலுக்குக் கொடுத்தால் திருமணத்தடை விலகும். வரன் பேசும் முன் கிருஷ்ணருக்கு வெண்ணெய் சமர்ப்பித்துவிட்டு செயலைத் தொடங்கினால் பிரச்சினை யில்லாமல் சுபமாக நடக்கும்.

✷ **தேங்காயை** உடைத்து பூஜை அறையில் வெகு நேரம் வைத்திருக்கக்கூடாது. உடைத்த தேங்காயை பூஜை முடிந்தவுடனேயே கூட எடுத்து விடுவது நல்லது. அது போல ஆலயத்தில் அர்ச்சித்த தேங்காயில் பாதியை யாருக் காவது கொடுத்துவிட்டால் நம்முடைய கஷ்டங்கள் விலகும்.

✷ **விளக்கு** வைத்த பின்னர் சீனியை நம் வீட்டில் இருந்து எடுத்து வெளியில் இருப்பவர்களுக்கு கொடுக் கக்கூடாது. அப்படிக் கொடுத்தால் நம் வீட்டில் இருக்கும் சந்தோஷத்தையே கொடுப்பது போல ஆகும். பெண்கள் உணவு சமைக்கும் முன் சீனியை கைகளால் தொட்ட பின்னரே ஏனைய உணவுப் பொருட்களைத் தொட வேண்டும். அப்படிச் செய்தால் மனதில் சந்தோஷமும் குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். (தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கிச்சிலிக்கிழங்கு

Botanical Name:-Curcuma zedoaria
Family:-Zingiberaceae
Eng: -Zedoary
Sinh:- Harankaha

இது ஈராண்டு வாழக்கூடிய செடியாகும். மிகுந்த வாசனையுடையது. உருளைவடிவ நீண்ட விரல் போன்ற நீட்டங்களைக் கொண்ட மெல்லிய மஞ்சள் நிறமான கற்பூரவாசனை யுடைய மட்டநிலத்தண்டுகளைக் கொண்டது. இலைகள் தனியிலை 30 தொடக்கம் 60 செ.மீ நீளமுடையது. கூரிய முனைகளைக் கொண்டது. இலையின் ஒருநரம்புப்பகுதி ஆழமான ஊதா நிறத்தைக் கொண்டது. பூக்கள் ஒழுங்கற்ற இருபாலான நீண்ட இலை க்காம்பையுடையது. புனல்வடிவ ஊதா நிற மானவை பழங்கள் கோளவடிவமானவை நீள்வட்ட விதைகள் வெள்ளைநிறம் தைமாத த்திலிருந்து பங்குனி வரை இதன் பூக்களை காணலாம்.

### பரம்பலும் இனவிருத்தியும்

மட்டநிலத்தண்டுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். நிழலான, சதுப்பான மண்வள முள்ள இடங்களில் கூடுதலாக பயிரிடலாம்.

### மருத்துவ குணங்கள்

✿ இதன் மட்ட நிலத்தண்டுகள் மருத்துவ குணமுடையவை. மிகுந்த வாசனையும் உடை யது. பசியை தூண்டக் கூடியது. காசநோய் கள், மூட்டுக்களில் ஏற்படும் பிடிப்பையும் தீர்க்கவல்லது. இவற்றைவிட வாய்நாற்றம், குடல்புண், காமாலை ஆகியவற்றிற்கு பயன் படக்கூடியதாகும்.

✿ இதன் மட்ட நிலத்தண்டுகளை சேக ரித்து நன்கு கழுவி, சிறுசிறு துண்டுகளாக்கி நிழலில் உலர்த்தி பயன்படுத்தப்படுகின்றது.

✿ கிச்சிலிக்கிழங்கு, அதிமதுரம், திப்பிலி இம்மூன்றிலும் 5 கிராம் அளவு எடுத்து 400 மில்லி நீர்விட்டு 225 மில்லி ஆக சுண்டக்காய்ச்சிய குடிநீரை 30 தொடக்கம் 60 மில்லி அளவு இருமலுக்கு கொடுக்கலாம். இம் 3 உலர் சரக்கு களையும் தமிழ் மருந்துக்கடைகளில் வாங் கலாம்.

✿ வீட்டில் மிளகாய்த்தூள் தயாரிக்கும் போது ஒரு கிலோ செத்தல் மிளகாய் அள



விற்கு 50 கிராம் உலர்ந்த கிச்சிலிக்கிழங்கை தோல் சுரண்டி வறுத்துச் சேர்த்துக் கொள் ளலாம். இலகுவில் சமித்து கொடுக்கும். இதனால் மிகுந்த வாசனையாகவும் மிள காய்த்தூள் இருக்கும். குடலில் இருக்கும் வாயுவையும் அகற்றக் கூடியது.

✿ குடற்புண் உடையவர்கள் காரமான மிளகாய்த்தூள் பயன்படுத்தக்கூடாது. அவர் களுக்கு தயாரிக்கும் சரக்குத்தூளில் கிச்சிலிக் கிழங்கை அளவாக சேர்த்தல் வேண்டும். குடற்புண்ணை ஆற்றும் சிறந்த மூலியாகும்.

✿ மற்றும் குளியல் பொடியான நலங்கு மாவில் கிச்சிலிக்கிழக்கை சேர்க்க முடியும். தற்போது பல விதமான சவர்க்காரங்கள் மக்களால் பயன்படுத்தப்படுகிறது. ஆனா லும் தோலில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நீக்கவும் தோலை பராமரிக்கவும் மென்மை யாக வைத்திருக்கவும் சிறந்தது மூலிகை குளி யல் பொடியாகும் (Herbal bath Power)

வெட்டிவேர் 100 கிராம்
கஸ்தூரிமஞ்சள் 100 கிராம்
கிச்சிலிக்கிழங்கு 100 கிராம்
சந்தனத்தூள் 100 கிராம்
உலர்ந்த எலுமிச்சம் தோல் 50 கிராம்
பச்சைப்பயறு 200 கிராம்

இவற்றை பொடித்து அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதை தினமும் தேய்த்து உடலில் அரைமணிநேரம் ஊறவிட்டு குளி க்க மேற்படி தோல் நோய்கள் நீக்கி தோல் அழகாகவும் மிருதுவாகவும் இருக்கும்.

✿ கண்ணிற்கு கீழ் கருவளையம் இருத் தலிற்கு திருநீற்றுப்பச்சை 100 கிராம், கிச்சி லிக் கிழங்கு 50 கிராம் என சேர்த்து அரை த்து கண்களிற்கு கீழ் பூசலாம்.

✿ புண்களிற்கு கிச்சிலிக்கிழங்கை வெங் காரத்துடன்சேர்த்து அரைத்து பூசலாம். இதையே சிதைவினால் உண்டாகும் புண்களிற்கும் பூசிவரலாம்.

✿ வாய்நாற்றம் உடையவர்கள் 35 கிராம் கிச்சிலிக்கிழங்கை சிறுதுண்டுகளாக்கி 500 மில்லி நீர்விட்டு 1/4 பங்காக குடிநீர்கா ய்ச்சி தாங்கக் கூடிய சூட்டில் வாய்கொப்பளி த்து வரலாம்.

✿ குடலில் வாய்வுத் தொல்லை, வயிற்றுப் பொருமல் இருப்பவர்கள் உள்ளி, வெந்தயம், கிச்சிலிக்கிழங்கு மூன்றையும் ஒரே அளவாக எடுத்து அதற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 ஆக குடிநீர்காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை எடுக்க வாய்வுத் தொல்லை, வயிற்றுக் கோளாறுகள் நீக்கும்.

✿ புதினாக் கீரை, உழுத்தம்பருப்பு, பொட் டுக்கடலை, கிச்சிலிக்கிழங்கு, புளி ஆகியவ ற்றை ஒன்றான சேர்த்தரைத்து சிறிதளவு வாயிற் போட்டு தண்ணீர் குடிக்க வாய்நா ற்றம் குமட்டல் வாந்தி குணமாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# ஆசியாவில் மாறிவரும் அரசியல் கணக்குகள்

இவ்வாறான விடயங்கள் சீனாவானது அதன் அயல் மற்றும் கூட்டணி நாடுகளுடன் உறவைப் பேணுவதில் பல கடினங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதையே சுட்டிக் காட்டுகின்றன. அத்துடன் இந் நாடுகள் ஏற்கனவே தலாய்லாமா, திபெத், தாய்வான் போன்ற விடயங்களில் சீனாவால் மேற்கொள்ளப்படும் நகர்வுகள் தொடர்பாகவும் அதிருப்தியடைந்துள்ளன.

இந்தியாவுடன் மிகவும் நெருக்கமாக்கி வருகின்றன. இந்தியாவானது தற்போது சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு, தென்கொரியா, சிங்கப்பூர் ஆகியவற்றுடன் மேற்கொண்டுள்ளது.

ஜப்பான், இந்தியா ஆகிய இரு நாடுகளும் தமக்கிடையிலான உறவைப் பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. கிழக்காசியாவின் கரையோர வலயத்துடன் இந்தியா தனது ஆதிக்கத்தை அதிகரிப்பதை விரும்பாத சீனாவிற்கு ஜப்பானுடனான இந்தியாவின் நெருக்கமான உறவானது பெரிதும் வரவேற்கப்படாத செய்தியாகவே உள்ளது.




அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா

சீனாவானது இராஜதந்திர ரீதியாக செல்வாக்குப் பெறுவதில் தனது பொருளாதார வலுவைப்

ஆனால், ஏனைய நாடுகளை அச்சுறுத்தி தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதைவிட அந் நாடுகளுடன் சிறந்த தொடர்பைப் பேணி அதன் மூலம் தனது செல்வாக்கை எவ்வாறு நிலை நாட்டலாம் என்பது தொடர்பாக சீனா கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. சீனாவானது பூகோள - அரசியல் ரீதியாக முழுமையான அனுகூலத்தைப் பெற வேண்டுமாயின் சீனா இதனைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

இங்கே இந்தியாவுக்கு ஒரு சந்தர்ப்பம் உள்ளது. சீனாவிற்கு ஆபத்தை உண்டுபண்ணக் கூடிய காரணிகளை ஆராய்ந்து அதன் அனுகூலங்களை இந்தியா கவனத்தில் எடுத்துக் கொள்வதுடன், ஏனைய ஆசிய நாடுகளுடன் சிறந்த உறவைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்



இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்


துள்ளனர்.

ஆசியப் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கைத் தடுப்பதற்காக அமெரிக்கா எவ்வாறு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்பதற்காக பிறிதொரு சமிக்ஞையாகவே இது உள்ளது.

ஜப்பான், அமெரிக்கா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் சீனாவின் செல்வாக்கை பரீட்சித்துப் பார்க்கின்றன. இதுவரை காலமும் சீனாவைத் தமது பிரதான வர்த்தகப் பங்காளியாக கொண்

**கிழக்கு மீதான அமெரிக்காவின் கவனயீர்ப்பு அலையானது ஒக்ரோபரில், உலகின் கேந்திர மற்றும் பொருளாதார ஈர்ப்பு மையமானது கிழக்கு நோக்கி நகர்கின்றது என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின் ரன் பிரகடனப்படுத்தியதிலிருந்து வெளிப்படையாகியுள்ளது.**

இந்நிலையில் சீனாவானது தனது பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் நடந்து கொள்ளும் பாங்கானது முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளதானது அதிர்ச்சி தரக்கூடிய விடயமல்ல. இதற்கும் மேலாக சில பசுபிக்வலய நாடுகள்



சீன ஜனாதிபதி ஹூ ஜின்ரியோ

அமெரிக்காவுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணி வருகின்றன.

அவுஸ்திரேலியா, ஜப்பான், வியட்நாம், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் தமது இராணுவ உறவை

பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், இது தனது இறுக்கமான போக்கை நெகிழ்ச்சிப்படுத்துவதிலேயே தற்போது அதிகம் முயற்சிக்கின்றது. அதாவது ஏனைய பல நாடுகள் சீனாவின் செல்வாக்கை எதிர்ப்பதை விரும்புவதாலேயே சீனாவும் தனது கடும் போக்கை குறைக்க வேண்டியுள்ளது.

சீனாவுடன் ஆசிய நாடுகள் சிறந்த பொருளாதார உறவைக் கட்டியெழுப்ப விரும்பும் அதேவேளையில் அதனுடன் சமநிலையைப் பேணுவதற்கான முயற்சியிலும் ஈடுபடும். அமெரிக்கா அல்லது இந்தியா தமது அதிகாரத்தைச் செலுத்துவதன் மூலம் சீனாவானது ஓரங்கட்டப்படக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கவில்லை. ஏனெனில் இவ்விரு நாடுகளைப் போலவே சீனாவும் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பெரும் பலத்தைக் கொண்டுள்ள நாடாக உள்ளது.

கொள்ள வேண்டும். இது விடயத்தில் இந்தியாவின், கிழக்கு நாடுகளை நோக்கிய கொள்கை வரவேற்கத்தக்க விடயமாகும். அத்துடன் சீனாவின் கடும் போக்கானது சில வெளிநாட்டுக் கொள்கைக்குப் பொருத்தமான வேறு கோட்பாடுகளை இந்தியா அறிமுகப்படுத்திக் கொள்ள முடியும். ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளுடனும் தற்போது பேணப்படாதுள்ள விடயங்களில் இந்தியா தொடர்பைப் பலப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட முடியும். பசுபிக் வலயத்தில் எல்லையைக் கொண்டிராத இந்தியாவானது அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து உச்சிமாநாடு ஒன்றில் கலந்து கொள்வதுடன், ஆசிய- பசுபிக் பிராந்திய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதாக ஒபாமா நிர்வாகத்திற்குட்பட்ட அதிகாரிகள் தெரிவித்




அவுஸ்திரேலியப் பிரதமர் ஜூலியாகிலாட்

டுள்ள ஆசிய நாடுகளுக்கு இந்தியாவானது ஒரு மாற்று வழியாக இருக்க முடியும்

அமெரிக்காவால் குறிப்பிடப்படும் இந்திய-பசுபிக் உடன்பாடானது இப் பிராந்தியத்தில் இந்தியா மிக வேகமாக வளர்ந்து வருவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதையும் உபகண்டம் என்ற நிலையைவிட ஆசியப் பிராந்தியத்தில் மிகப்பெரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய ஒரு நாடாக விளங்க வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தையும் பிரதிபலித்துக் காட்டுகின்றது.

(முற்றும்)

# தியானம்



## ஆனந்தத்தின் வாசல்

ஆன்மீகம் 15

கேள்வி: யோகா என்றால் என்ன? யோகி என்றால் என்ன?

சத்குரு: யோகா என்ற வார்த்தைக்கு பொருள் ஒன்றுபடுதல் எனபது. ஒன்றுபடுதல் என்றால் எதுவும் எதுவும் ஒன்றுபடுகிறது? எது இங்கே ஒன்றுபடத் தேவையிருக்கிறது? நவீன விஞ்ஞானம், முழுப்பிரபஞ்சமும் ஒரே சக்தியின்



அதிர்வுதான் என்று சொல்கிறது. எனவே இது ஏற்கனவே ஒன்றுபட்டுத்தான் இருக்கிறது. எதுவும் தனியாக இல்லை. மனிதனின் புரிதலில் மட்டும்தான் இந்தப்பிரிவு இருக்கிறது. மனிதனின் புரிதலில் மட்டும்தான் நீயும், நானும் தனித்தனியென்ற பிரிவு இருக்கிறது. ஆனால், இன்றைய நவீன விஞ்ஞானம் முழுப்பிரபஞ்சமும் ஒரே சக்திதான் என்று சந்தேகத்துக்கிடமில்லாமல் நிரூபித்திருக்கிறது. எனவே உங்கள் புரிதல் மட்டும்தான் உடைபட்டிருக்கிறது. எனவே உங்கள் புரிதலை நீங்கள் உயர்த்தினால், இந்த உலகம் எப்படி இருக்கிறதோ அப்படியே பார்க்குமாறு உங்கள் புரிதல் ஒரு கட்டத்திற்கு வருமானால் இந்தப் பிரபஞ்சம் அனைத்தும் ஒன்றுதான் என்பதை நீங்கள் உணரத் தொடங்குவீர்கள். அப்படியிருந்தால் நீங்கள் யோகத்தன்மையில் இருக்கிறீர்கள் என்று சொல்லலாம்.

அப்படியானால், ஒரு யோகி என்பவர் யார்? இந்தப் பிரபஞ்சத்தின் ஒருமை நிலையை, ஒன்றுபட்ட தன்மையை யார் உணர்ந்திருக்கிறாரோ அவர்தான் யோகி. தற்போது இங்கே அமர்ந்திருக்கிறீர்கள், உங்கள் அனுபவத்தில் உங்களைச் சுற்றியுள்ள மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், மற்றும் ஜடப்பொருட்கள் எல்லாவற்றையும் உங்களுக்குள் ஒரு பாகமாக உணருவீர்களேயானால், உங்கள் கைகளில் உள்ள ஐந்து விரல்களையும் எப்படி உணருகிறீர்களோ அப்படியே எல்லாவற்றையும் உணர்ந்தால், உங்களுக்கு நீதிபோதனை ஏதேனும் சொல்லித்தரத் தேவையிருக்கிறதா? நீங்கள் இந்த மனிதரிடம் நன்றாக நடந்து கொள்ளுங்கள், அவரிடம் அன்பாக இருங்கள், அவரைத் துன்புறுத்தாதீர்கள், அவரைக் கொல்லாதீர்கள், அவரிடம் திருடாதீர்கள் என்றெல்லாம் சொல்லித்தரத் தேவையிருக்கிறதா? அனைத்தையும் உங்களுக்குள் ஒரு பாகமாக பார்க்கும் போது நீங்கள் பிரபஞ்சத்தோடு மிகவும் இணக்கமாக இருக்கிறீர்கள். எனவே, யோகா என்பது ஒரு குறிப்பிட்ட விதமான தத்துவமோ அல்லது கருத்தோ அல்லது நம்பிக்கையோ அல்ல. இது ஒவ்வொரு மனிதரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

யோகா என்பது உடற்பயிற்சியல்ல. உயர்ந்த பட்ச சாத்தியங்களை அடைவதற்காக உங்கள் உடலை ஒரு குறிப்பிட்ட விதமாக தயார்ப்படுத்துகிறீர்கள், அது ஒரு அம்சம் மட்டும்தான். ஆனால், அடிப்படையாக யோகா என்பது உங்களைச் சுற்றியுள்ள அனைத்தையும் நீங்களாகவே உணரக்கூடிய கட்டத்திற்கு, ஒரு புரிதலுக்கு, ஒரு அனுபவ நிலைக்கு உங்களை எடுத்துவரும் ஒரு கருவி. அறிவியல் உங்களுக்கு அதனை நிரூபணம் செய்திருக்கிறது. மதங்கள் எப்போதுமே உங்களுக்குக் கடவுள் என்பவர் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்றன. நவீன விஞ்ஞானமும் தற்போது என்ன சொல்கிறது என்றால், எல்லாம் ஒரே சக்திதான் என்று சொல்கிறது. நீங்கள் எல்லாம் ஒரே சக்திதான் என்று சொன்னாலும் சரி, கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்று சொன்னாலும் சரி, இரண்டுமே ஒன்றுதான். ஆனால், வித்தியாசம் என்னவென்றால், ஒரு விஞ்ஞானிக்கு அதைப்பற்றிய அனுபவம் கிடையாது. அவர் ஆராய்ச்சி செய்து அந்த முடிவுக்கு வந்திருக்கிறார். மதம் சார்ந்த மனிதருக்கும் அதைப் பற்றிய எந்த அனுபவமும் இல்லை. அவர் அதை நம்புகிறார், அவ்வளவுதான். ஒரு யோகி என்பவர் ஆராய்ச்சி முடிவுகளையோ அல்லது நம்பிக்கைகளையோ ஏற்பதில்லை. அவர் அறிந்துகொள்ள விரும்புகிறார். எல்லாவற்றையும் அவரது அனுபவத்தின் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறார். அப்படி ஒருவர் அறிந்து கொண்டால், அவரையே நாம் யோகி என்று குறிப்பிடுகிறோம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மலேசியாவில் பயண இலக்கியம் ஒரு கண்ணோட்டம்

01

### முன்னுரை

பயணங்களின் போது கிடைக்கின்ற பல்வேறு அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வண்ணம் அதனை எழுத்து வடிவில் கொண்டு வருவோர் பலர். நாளிதழ்களில் மற்றும் சஞ்சிகைகளில் கட்டுரைகளாகப் பலர் அரிய தகவல்களை உள்ளடக்கி எழுதியுள்ளனர். ஆனால், அவற்றை நூல்வடிவில் கொண்டு வந்தோர் மிகச்சிலரே! மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் நூல் வடிவில் வந்த பயண இலக்கியம் மிகச் சிலவே! அவற்றைப்பற்றி ஒரு கண்ணோட்டமாக இந்தக்கட்டுரை அமைகிறது!

### பயண இலக்கியங்களின் நோக்கம்

எல்லோருக்கும் நாடுகளை சுற்றிப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டுவதில்லை. பயணங்கள் மேற்கொள்வது மிகப் பெரிய காரியமல்ல! ஆனால், அதற்குத் திட்டமிடுவதும் செலவுகளை ஈடுகட்டப் பணம் தேடுவதும் மிக முக்கியம். பலருக்குப் பயணம் என்பது எட்டாக் கனியாகவே இருந்து விடுகிறது.

அதிலும் பயணங்கள் மேற்கொண்டு அதில் கிடைக்கும் அனுபவங்களை நல்ல நடையில் தொகுத்து வழங்குவது எல்லோராலும் முடியாது! மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் பலர் தங்களின் பயண அனுபவங்களை படிப்போர் கவரும் வண்ணம் வழங்கியுள்ளனர். இருப்பினும் எனது ஆய்விற்கு எட்டியவரை பன்னிரண்டுக்கும் குறைவான நூல்களே தமிழில் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது!

### பயணங்கள் விளைத்த பயன்கள்

உலகில் பல்வேறு பயணங்களால் அரிய பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. வரலாற்றில் பல குறிப்புக்கள் காணக் கிடைக்கின்றன.

பயணங்கள் மேற்கொள்வதற்கு வசதிகள் குறைவாக இருந்த காலத்தில் மனிதர்கள் துணிச்சலாக பல இடங்களுக்குச் சென்று அங்குள்ள நிலவரங்களை குறிப்புகளாக எழுதி, வருங்காலத் தலைமுறையினரின் பயன்பாட்டிற்கு வைத்துச் சென்றுள்ளனர்.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

சீனாவைப்பற்றி மார்க்கோபோலோ எழுதிய பல கட்டுரைகள் இத்தாலி நாட்டில் மட்டுமல்ல ஐரோப்பா முழுவதும் ஆசிய நாடுகளைப்பற்றி தகவல்கள் அறிய உதவின.

அதே போன்று சீன யாத்திரீகர்கள் பா-ஹியான் போன்றோர் இந்தியா உட்பட பல நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை, ஆட்சிமுறை போன்றவற்றை எழுதியுள்ளனர்.

தமிழ் இலக்கிய உலகில் 1940 ஆம் ஆண்டுகளில் அ.க.செட்டியார் என்பவர் பல நாடுகளுக்குச் சென்று தமிழர்களின் நிலையைப்பற்றி எழுதினார். உலகம் சுற்றும் தமிழன், அமெரிக்க நாட்டில், கரீபியன் கடலும் கயானாவும், மலேசியா முதல் கனடா வரை, ஐரோப்பா வழியாக ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவரது நூல்களில் அப்போதைய காலத்தில் தமிழர்கள் வாழ்ந்த நாடுகளில் அனுபவித்த இன்னல்களையும் வரலாற்றுச் செய்திகளையும் எழுதினார்.

மலேசியாவைப் பொறுத்த மட்டில், நூல்வடிவில் வந்துள்ள பயண நூல்கள் நாடுகளின் அமைப்பு, வரலாற்றுச் செய்திகள், சுற்றுலா மையங்கள், மக்களின் வாழ்க்கைமுறை, சிக்கல்கள் போன்றவற்றை விபரிக்கின்றன. ஒரு சில நூல்கள் ஒரே கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளதையும் காண முடிகிறது.

### நாதன் கண்ட நாடுகள்

மலேசியத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்த எஸ்.பி.எஸ். நாதன் 1960ஆம் ஆண்டு அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியவுடன் தனது அனுபவங்களைத் தொகுத்து சங்கமணியில் எழுதினார்.

அதன்பின் 1960 ஆம் ஆண்டு வரை அவர் ஷாங்காய், ஜப்பான், அமெரிக்கா, போர்ட்டோரிக்கோ, இங்கிலாந்து, சுவிட்சலாந்து, ஜேர்மனி, டென்மார்க், ஸ்வீடன், நோர்வே, இலங்கை, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

படங்களுடன் இவரது நூல் 1969-ல் 406 பக்கங்களில் வெளிவந்துள்ளது. தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளர் பி.பி. நாராயணன், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் இடைக்காலத் தலைவர் இராம.சுப்பையா, தமிழ் நேசன் ஆசிரியர் முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன், சங்கமணி, நிர்வாகி ஜி.பெருமாள் அதன் பொறுப்பாசிரியர்கள் செ.குணசேகர், சங்கு சண்முகம் ஆகியோர் தங்களின் கருத்துக்களைத் தந்துள்ளனர்.

(தொடரும்)

ஆ.குணநாதன் -மலேசியா

# மீள்குடியேறியுள்ள மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

## ஆறு குழுக்கள் நியமிப்பு



வடமாகாணத்தில் மீள்குடியேறியுள்ள மக்களின் தேவைகளை பெற்றுக் கொடுப்ப தற்கான திட்டங்களை தயாரிக்கவென உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரது தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி செயலணியின் செயலாளர், மீள்குடியற்ற அமைச்சின் செயலாளர், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அரசாங்க அதிபர்கள் மற்றும் வடமாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர், வடக்கிலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் மீள்குடியேறுவதில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் தற்போது மீள்குடியேறியுள்ள மக்களின் தேவைப்பாடுகள், அதற்கான நடைமுறை செயற்பாட்டு திட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் ஆறு உயர்மட்டக்குழுக்களும் இங்கு நியமிக்கப்பட்டன.

வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் இரு குழுக்களும் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களைக் கொண்ட 4 குழுக்களும் இங்கு ஏற்படுத்தப்பட்டன.

விவசாயம், கல்வி, சுகாதாரம், காணி, வீதி கூட்டுறவு, மீன்பிடி சம்பந்தமாக தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காக வேண்டிய தமது ஆலோசனைகளையும் செயற்றிட்டங்களையும் இக்குழு சமர்ப்பிக்க வேண்டும் என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இக்குழுவில் அங்கம் வகிக்கும் துறை சார்ந்த உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து எதிர் வரும் ஜனவரி மாதம்19 ஆம் திகதிக்கு முன்னர் தமது அறிக்கையினை சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தாக்குதல் சம்பவம் தொடர்பில் 6 பேர் கைது

ஐக்கிய தேசியக்கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர், சட்டத்தரணி மைத்திரி குணரத்ன உள்ளிட்ட ஆறு பேர் மிரிகான பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்குள் அத்துமீறி பிரவேசித்து அதற்கு சேதம் ஏற்படுத்தியதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிசார் குறிப்பிட்டனர். (அ-2)

# 8 இலட்சமாவது சுற்றுலாப்பயணி நேற்றுமுன்தினம் இலங்கை வருகை

இலங்கைக்கு இவ் வருடம் வருகை தந்த 8இலட்சமாவது சுற்றுலாப்பயணியை இலங்கை சுற்றுலா சபை பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நேற்றுமுன்தினம் வரவேற்றது.

இலங்கை வரலாற்றில் ஒரு வருடத்தில் வருகைதந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இதுவாகும்.

ஜோன் சம்பியும் அவரின் மனைவியும் இவ்வருடத்தின் 8 இலட்சமாவது சுற்றுலா பயணியாக இலங்கைக்கு வந்தனர். அவர்களை சுற்றுலாச்சபைத் தலைவர் நாலக கொட ஹேவா வரவேற்றார். (அ)

# வர்த்தகர் கொலை குறித்து விசாரிக்க விசேட பொலிஸ்குழு

(கொழும்பு)

கொழும்பு காக்கைதீவுப் பகுதியில் வர்த்தகர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்த விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க ஆலோசனை வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் குறித்த வர்த்தகர்களின் சடலம் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய வேலுப்பிள்ளை அன்டனி ராஜா என்ற வர்த்தகரே கொலை செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# அங்காடி வியாபாரிகளுக்கு நிரந்தரமான இடத்தினைப் பெற்றுத்தர வேண்டும்

## வியாபாரிகள் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா நகர சபைக்குட்பட்ட வீதிகளில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கு வீதிகளில் வியாபாரம் செய்வதற்கு நகரசபை அனுமதி வழங்காது என தெரிவிக்கப்பட்டதை அடுத்து தாம் வியாபாரம் செய்ய சிறந்த இடத்தை வர்த்தக சங்கமும் நகர சபையும் இணைந்து ஏற்படுத்தித்தர வேண்டும் என அங்காடி வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா ஹொரப்பத்தான வீதியில் 13 வருடங்களாக நகரசபைக்கு வரி செலுத்தி தற்காலிக கடை அமைத்து 43 பேர் வியாபாரம் செய்து வந்தோம். அன்றிருந்த நகர சபை செயலாளர் வீதியை அகலமாக்க வேண்டியுள்ளதால் நீங்கள் உங்கள் கடையை அகற்றிவிடுங்கள். வேறு ஓர் இடத்தில் கட்டித் தருகின்றோம் என்று கூறி 3 வருடங்கள் கடந்து விட்டன.

இந்த 43 பேருடைய பிரச்சினை வர்த்தகர் சங்கத்திற்கும் வவுனியா அரசாங்க அதிபருக்கும் தெரியும். எனவே எமக்கு சிறந்த நிரந்தரமான இடம்பெற்றுத் தர வேண்டும். (அ-2)

# உயர்தரப் பெறுபேறுகள் தாமதம்; ஆணைக்குழுவில் முறையிட முடிவு

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

உயர்தரப்பெறுபேறுகள் வெளியாக தாமத மாவதன் காரணமாக 3 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதன் காரணமாக மாணவர்களது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பாக இன்றைய தினம் மனித உரிமை ஆணைக் குழுவிடம் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மத விவகாரங்கள் அமைச்சினது நிதிமோசடி குறித்து விசாரணை



## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகள் பிரதமர் டி.எம்.ஜயரத்னவின் உத்தரவிற்கமைய முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கமைய கணக்காய்வாளர் திணைக்களத்திடம் இருந்து அது தொடர்பிலான அறிக்கையொன்றை பெற்றுக்கொண்டுள்ளதாக அமைச்சின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

2600ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு அனுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஐந்து அலங்காரத் தேரரணங்களில் இந்த நிதிமோசடி இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத்தவிர புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்கள் சில மோசடியான முறையில் விற்பனை செய்யப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு அமைச்சின் உயரதிகாரிகள் சிலரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக புத்தசாசன அமைச்சின் சிரேஷ்ட உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

கணக்காய்வாளர் திணைக்களத்தின் விசா ரணைகளின் பின்னர் இதனுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு பிரதமர் தீர்மானித்துள்ளார். (அ-2)

# ஐ.தே.க. வை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டார்

## விக்கிலீக்ஸ் தகவல்

ஐக்கிய தேசியக் கட்சியை பலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொள்ளவும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பலவீனப்படுத்தவும் ஜனாதிபதி கூடுதல் சிரத்தை காட்டியதாக கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக் இந்தத் தகவல்களை அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

கருஜயசூரிய ஆளும்கட்சியில் இணைந்து கொள்வதற்கு பத்து தினங்களுக்கு முன்னதாக அமெரிக்கத்தூதுவரிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது என அமெரிக்கத்தூதுவர் தமது குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் இருதரப்பினருக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஆக்கபூர்வமாக அமையவில்லை என குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# புதுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன

## விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் மாளிகாவத்தைக்குச் சென்று யார் கொலை செய்தார்கள் என்பதைத் தேடுவதாகவும் இவரை யார் கொலை செய்தார்கள் என்பது எமக்குத் தெரிந்த விடயம் என நான் நினைக்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது தந்தையை கொலை செய்தவரை அரசாங்கம் மறைக்க முற்படுவதாக பாரதவின் பிள்ளைகள் குறிப்பிடுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் என சுட்டிக்காட்டிய விக்ரமபாகு கருணாரத்ன ஆலோசகரைக் கொலை செய்துவிட்டு யார் கொலை செய்தது என்பதைத் தேட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் புதுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்கு தொடர முடியுமா?

## அமெரிக்க நீதவான் கேள்வி

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக வழக்குத் தொடர முடியுமா என அமெரிக்க மாவட்ட நீதவான் கொலட் கோட்லி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்க நீதிமன்றில் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரக் கூடிய சாத்தியம் குறித்து அறிவிக்குமாறு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அவர் பணித்துள்ளார்.

இறைமையுடைய நாடொன்றின் ஜனாதிபதியாக செயற்பட்டு வரும் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது. ஏனைய நாட்டுத் தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாததனைப் போன்றே இலங்கை ஜனாதிபதிக்கு எதிராகவும் வழக்குத் தொடர முடியாது என சட்டத்தரணி மிச்சல் மோர்சரி நீதவானிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

ஜப்பான் அரசாங்கத்திற்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து அமெரிக்க அரசாங்கத்திடம் கருத்து கோரப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சம்பவங்கள் அமெரிக்காவில் நடைபெறவில்லை, அமெரிக்கர்கள் இதனால் பாதிக்கப்படவில்லை என்றும் சட்டத்தரணி தமது வாதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் பிரதிவாதியின் கோரிக்கையை அமெரிக்க மாவட்ட நீதவான் கோட்லி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதன்படி சட்டத்தரணியின் அறிக்கையை பரிசீலனை செய்த நீதவான் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரக் கூடிய சாத்தியம் குறித்து ஆராய்ந்து வருகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)

# சுனாமி முன்னெச்சரிக்கை பரீட்சார்த்த நடவடிக்கை

(கொழும்பு)

கரையோர பிராந்தியங்களை உள்ளடக்கும் வகையில் 14 மாவட்டங்களில் நேற்றைய தினம் பரீட்சார்த்த ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய நிறைவேற்று பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி வெளியிட்டுள்ளார்.

இதற்கமை கொழும்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் இந்தப் பரீட்சார்ந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்று மாலை 3.30 மணியளவில் ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை பரீட்சார்த்த சமிக்ஞை விடுக்கப்படும் எனவும் தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய நிறைவேற்று பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (அ-2)

# வலி.கிழக்கு வரவு செலவுத்திட்ட அறிக்கையை பார்வையிட முடியும்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபையின் 2012ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் பிரதேசசபையின் கட்டளைச்சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமையிலிருந்து எதிர்வரும் 27 ஆம் திகதி வரை பார்வையிட முடியும்.

இதனை இப்பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் ஏனைய உப அலுவலகங்களிலும் பார்வையிட முடியும் என வலி. கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்துள்ளார். (அ)

# 2011.12 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 69-வெஸ்பசியான் ரோமப் பேரரசின் ஒரே ஆண்டில் 4 ஆவது பேரரசனாக முடிசூடினான்.

★ 1768- நேபாளம் ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட்டு இன்றுவரையுள்ள நாடு தோற்றுவிக்கப்பட்டது.

★ 1902-இலங்கையில் போவர் போர்க் கைதிகளாக இருந்தவர்கள் தென்னாபிரிக்காவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

★ 1913- உலகின் முதலாவது குறுக்கெழுத்துப் போட்டி நியூயோர்க் வேர்ல்ட் பத்திரிகையில் வெளியானது.

★ 1967- உலகின் முதலாவது இருதயமாற்று சிகிச்சை பெற்ற தென்னாபிரிக்காவைச் சேர்ந்த லூயிஸ்நாஷ்கான்ஸ்கி சிகிச்சை பெற்று 18 நாட்களின் பின்னர் இறந்தார்.

★ 1968- சந்திரனுக்கான மனிதனை ஏற்றிச் சென்ற விண்கலம் அப்பலோ 8 குளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது. புவியீர்ப்பை தாண்டிச்சென்ற முதலாவது மனித விண்கலம் இதுவாகும்.

★ 1971 ஐ.நா. அவையின் பொதுச் செயலாளராக கூர்ட் வால்ட்ஹெயிம் தெரிவானார்.

★ 1973 அரபு இஸ்ரேல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஜெனீவா மாநாடு ஆரம்பமானது.

★ 1979 ரொடீசியாவின் சுதந்திரத்திற்கான உடன்பாடு லண்டனில் கைச்சாத்திடப்பட்டது.

★ 1988- ஸ்கொட்லாந்தில் லொக்கர்பி என்ற இடத்தில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க விமானத்தில் குண்டு வெடித்ததில் 270 பேர் உயிரிழந்தனர்.

★ 1991-கசகஸ்தானில் அல்மா ஆட்டா நகரில் பதினொரு சோவியத் குடியரசுகளின் ஜனாதிபதிகள் ஒன்று சேர்ந்து தனிநாடுகளின் பொது நலவாய அமைப்பு உருவாகியுடன் சோவியத் ஒன்றியம் கலைக்கப்படும் என அறிவித்தனர். இதன்படி டிசெம்பர் 26 ஆம் நாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.

★ 1992- டச்சு விமானம் ஒன்று போர்த்துக்கலில் வீழ்ந்ததில் 56 பேர் உயிரிழந்தனர்.

★ 1995-பெத்லகேம் நகரம் இஸ்ரேலியர்களிடம் இருந்து பாலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

★ 2007- பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் மசூதி ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 50 பேர் (குறைந்தது) உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1878- ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (இ.1953)


★ 1942- ஹூசிங்தாவ், சீன மக்கள் குடியரசின் தலைவர் (இ.1953)

★ 1948-சாமுவேல் ஜாக்சன், அமெரிக்க திரைப்பட நடிகர்

★ 1963- கோவிந்தா, இந்திய நடிகர்

### இறப்பு


★ 2008- கே.இந்திரகுமார், ஈழத்து எழுத்தாளர், நடிகர்



★ 2006-ஈழத்தின் மறுமலர்ச்சி எழுத்தாளரான வரதனின் நினைவு தினம் (பி.1924)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2011-14.01.2012




மகம், பூரம், உத்தரம், 1 ஆம் பாதம்

**சுதந்திரமான மனப்போக்கு கொண்டு செயல்படும் சிம்ம இராசி நேயர்களே!**

உங்களுக்கு செயலாற்றும் திறமையும் தன்னம்பிக்கையும் அதிகம் உண்டு. எதையும் நுணுக்கத்துடன் அறிந்து பேசுவீர்கள். முன்னோடியாக இருக்க வேண்டும், இந்த சமுதாயத்துக்கு தான் யார் என்று காட்ட வேண்டும் என்ற சிந்தனை இளைமையிலேயே குடிகொண்டு இருக்கும். உங்களுடைய கொள்கைகளும் குணாதிசயங்களும் பயப்படும்படியாகவும் இருக்கும், பிறர் பயன்படும்படியாகவும் இருக்கும்.

உங்களுக்கு இந்த மார்கழி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது 7 1/2 சனி விலகி இன்பங்களை எல்லாம் அள்ளி வழங்கப்போகிறது. தொட்ட் காரியங்கள் இனி வெற்றி பெறும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவார்கள். வெற்றிக்குரிய செய்திகளை நாள் தோறும் எதிர்பார்க்கலாம். வீடு மாற்றச் சிந்தனைகள் குருவின் பார்வை பலத்தால் உருவாகும்.

இதுவரை உங்கள் இராசியை பார்த்த குரு வக்ரகதியில் இருந்தார். இப்போது வக்ர நிவர்த்தியாகி உங்கள் இராசியை பார்ப்பதால் அவரது பார்வைக்கு பலம் அதிகம் கிடைக்கிறது. குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கு ஏற்பத் தடைகள் இனி அகலும், தாராளமாக பணம் புரளும். கடைதிறப்பு விழாக்கள் முதல் கல்யாண விழாக்கள் வரை கைகூடி வரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அற்புதமான நேரமிது. பதவிகளும் புதிய பொறுப்புக்களும் வந்து சேரும். சனி விலகும் இந்த நேரத்தில் சனி பகவானை வழிபட்டு வருவதோடு, சனி கவசமும் பாடி வழிபட்டால் சஞ்சலங்கள் தீரும்.

டிசம்பர் 17 ஆம் திகதி சுக்கிரன் மகர இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே சகோதர வழி ஒற்றுமை, பலம் கூடும். தொழில் ரீதியாக எடுத்த புதிய முயற்சிக்கு அரசு வழிச் சலுகைகள் கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் வியப்படைவீர்கள். ஆடை, ஆபரண, சேர்க்கையுண்டு. அதிகாரிகளால் அனுகூலங்கள் கிடைக்கும்.

டிசம்பர் 21 ஆம் திகதி துலாம் இராசியில் சனி உச்சம் பெறுகிறார். இது வரை நீங்கள் பட்டபாட்டிற்க்கு பலன் கிடைக்கப்போகிறது. கொட்டிக் கொடுக்கும் சனியை கும்பிட்டு வாருங்கள், பட்டி, தொட்டிகளில் எல்லாம் புகழ் பரவும், தட்டிக் கேட்டவர்கள் எல்லாம் தானாக வந்து சரணடைவார்கள். கொட்டமடித்தவர்களும் கும்பிட்டு ஆலோசனை கேட்பார்கள். திட்டமிட்டபடியே சனிபகவான் செய்து முடிப்பார். விலகியது ஏழரை, இனி வீட்டுக் கவலைகள் ம்மாறும். போட்டிகள் குறையும். ஆற்றல் உங்களுக்குள் வந்து சேரப் போவதால் நீங்கள் யாரென்று அறிந்து கொள்ளும் நிலை உருவாகும்.

ஜனவரி 1 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். ஜனவரி 10 ஆம் திகதி கும்ப இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். சப்தம சுக்கிரனால் உடன் பிறப்புக்கள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வார்கள். கடிதம் கனிந்த தகவல் தரும். புதிய தொழில் தொடங்க தீட்டிய திட்டங்கள் நிறைவேறும்.

இம் மாதம் புதன்கிழமை தோறும் விஷ்ணுவழிபாட்டில் விருப்பம் காட்டுங்கள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

இம்மாதம் வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும் மாதமாக அமையும். கணவன் மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். பணப் பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் அதிகரிக்கும். புகழ், வசதி பெருகும். பொன்னான எதிர்காலம் அமையும் அறிகுறிகளும் தோன்றும்.

■ ■ ■

## சிவல்புரி சிங்காரம்




உத்தரம் 2,3,4 பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 பாதங்கள்

**குடும்ப கௌரவத்தையும் குலப் பெருமையையும் காப்பாற்றும் கன்னி இராசி நேயர்களே!**

சிந்திக்காமலேயே செயற்பட்டு சிறப்பினை அடைவீர்கள். உங்கள் நாணயமும் நேர்மையும் இரு கண்களாகக் கொண்டவர்கள் நீங்கள். புத்தகத்தில் ஈடுபாடும், பொழுதெல்லாம் சிந்திப்பதிலும் காலம் கழிப்பவர்களில் பெரும்பாலானோர் உங்கள் இராசிக்காரர்களாகவே இருப்பார்கள். வாழ்க்கையில் வரும் சந்தேகங்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்யாவிட்டால், உங்களுக்குத் தூக்கமே வராது.

உங்களுக்கு இந்த மார்கழி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடிவரும் என்றே சொல்ல வேண்டும். கடந்த ஐந்து வருடகால சனியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, குடும்பச் சனி ஆதிக்கத்தில் இப்பொழுது இருக்கிறீர்கள். குடும்பத்தில் சுப காரியங்களை உண்டாக்குவதும், கொடுக்கல், வாங்கல்களை சீராக்குவதும் அடிமைத் தொழிலில் இருந்து விடுபட வைப்பதும் ஆண்டவனை வழிபடுவதன் மூலம் நற்பலன்களைப் பெறுவதும் இந்த சனியின் ஆதிக்கத்தில்தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். சனிப்பெயர்ச்சி அன்று சனிபகவான் சந்நிதிக்கும் சென்று எள் தீபம் ஏற்றி வழிபடுங்கள். யோடித் தீபமேற்றினால், தேடிவரும் துயரங்கள் ஓடியொழியும். பதிகம் பாடினால், பணவரவு பெருகும். கவசம் பாடினால், கவலை தீரும். ஆடை தானம் கொடுத்தால் ஆரோக்கியம் சீராகும்.

டிசம்பர்17 ஆம் திகதி மகர இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இரண்டு, 9 க்கு அதிபதி 5-ல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பிள்ளைகளால் பெருமை சேரும். உள்ளம் ம்கிழும் சம்பவங்கள் ஒவ்வொன்றாக நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அள்ளிக் கொடுக்கும் சுக்கிரன் அதிக இலாபத்தை வழங்குவார். இல்லத்தில் திருமண வாய்ப்புக்கள். இனிதே கூடிவரும்.

மந்தன் என்றும் காரி என்றும் அழைக்கப்படுகின்ற சனி பகவான். டிசம்பர் 21 ஆம் திகதி உச்சம் பெறுகிறார். எனவே எல்லா விதத்திலும் நீங்கள் வாழ்வின் உயர் நிலையை அடையப்போகிறீர்கள். சிந்தித்துக் குழம்பிக்கொண்டிருந்த நீங்கள் இனி சீக்கிரத்தில் முன்னேற்றம் அடைவது கண்டு உறவினர்களே ஆச்சரியப் படுவார்கள். இக்காலத்தில் சனிபகவானை வழிபட்டு வந்தால், உங்கள் ஆவல்கள் பூர்த்தியாகும். அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் அதிகரிக்கும்.

உங்கள் இராசி நாதன் புதனும் தனாதிபதி சுக்கிரனும் பெயர்ச்சியாகும் நேரத்தில் புதிய திருப்பங்கள் ஏற்படும். ஜனவரி முதலாம் திகதி தனுசு இராசியில் புதனும் ஜனவரி 10 ஆம் திகதி கும்பராசியில் சுக்கிரனும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக பணப்பற்றாக் குறை அகலும், புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்புக் கிடைக்கும். குடும்ப வருமானத்தை உயர்த்திக் கொள்வதிலும் எடுத்த முயற்சி பலன் தரும். இம்மாதம் சனிக்கிழமை தோறும். விநாயகப் பெருமானை வழிபட்டு வந்தால், சஞ்சலங்கள் தீரும். சந்தோசங்கள் பெருகும்.

இம்மாதம் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் எதிர்பார்த்தபடி இருக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். பெண் குழந்தைகளின் சச்சரவுகள் நல்ல முடிவுக்கு வரும். வீடு மாற்றச் சிந்தனை மேலோங்கும். கணவன் மனைவி உறவு பலப்படும். ஒதுங்கியிருந்த சொந்தக்காரர்கள் இனி ஒன்றுபடுவர்கள். பதுங்கியிருந்த பகை இனி மாறும். குலதெய்வ வழிபாடும், இராகு-கேது ரீதியிலும் குடும்ப முன்னேற்றத்தைக் கூட்டும்.

(தொடரும்)

# நீரிழிவு நோயால் வரும் சில முக்கிய பிரச்சினைகள்

**இரத்தப் பேரழுத்தம்**

நீரிழிவு நோய்க்கும் இரத்தப் பேரழுத்தத்திற்கும் என்ன தொடர்பு என கேட்கமாட்டீர்கள் என நினைக்கிறேன்.

நீரிழிவு நோயானது நேரடியாக இரத்த நாளங்களை பாதிப்பதால் இரத்த அழுத்தம் ஏற்படும்போது இரத்த நாளங்கள் சிதைந்து விடுகிறது. எந்த இடத்திற்குச் செல்லும் நாளங்கள் விரைந்து பாதிக்கப்படுகிறதோ அந்த உறுப்பில் பிரச்சினை ஆரம்பிக்கும்.

இரத்தப் பேரழுத்தம் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

இரத்தம் இதயத்திற்கு வரும்போது ஒரு குறிப்பிட்ட வேகத்திலும் இதயத்திலிருந்து வெளியேறும்போது ஒரு குறிப்பிட்ட வேகத்திலும் இரத்த நாளங்கள் வழியாக வெளியேறும். இதற்கு இரத்த அழுத்தம் என்று பெயர்.

இரத்தம் வழியாக ஒட்சிசனை செல்களுக்கு கடத்துவதற்கு இரத்த அழுத்தம் தேவை.

உடலின் உறுப்புகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்து வேலை செய்யும் போது இரத்த அழுத்தம் இயல்பாக இருக்கும். ஆனால், அவற்றுக்கு இடையே சமச்சீரின்மை தோன்றும்போது இரத்தப் பேரழுத்தம் வந்துவிடும்.

இரத்த அழுத்தத்தை 120/80 எனக் குறிப்பிடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். இதில் பெரிய எண்ணிக்கையானது இதயம் பம்ப் செய்யும்போது நாளங்களுக்குள் பாயும் இரத்த அழுத்தத்தின் அளவு.

இரத்தத்தை வெளியேற்றிய பின்னர் இதய அறைகள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளும். அந்த நேரத்தில் இரத்த அழுத்தம் சற்றுக் குறையும். இதை சிறிய எண்ணில் குறிப்பிடுவார்கள். இரத்தத்தை பெறும்போது உண்டாகிற அழுத்தம் குறைவான எண்ணிக்கையில் குறிக்கப்படுகிறது.

கவலை, மனஇறுக்கம், காப்பின் மற்றும் நிக்கோட்டின் பொருட்களை பயன்படுத்துதல், உடற்பயிற்சி செய்தல் ஆகியவற்றின் போது இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

**இரத்த அழுத்தத்தின்போது என்ன நடக்கிறது?**

இரத்தத்தில் கொழுப்பு நகர்ந்து செல்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இரத்தம் வேகமாக அடித்துச் செல்லப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கும்போது ஆங்காங்கே இரத்த நாளங்களில் கொழுப்புகள் படிந்து விடும். இதனால் இரத்த ஓட்டத் தடை ஏற்படும்.

இதய இரத்த நாளங்களில் இவ்வாறு தடை ஏற்படும் போது இதயத்தில் ஊசியால் குத்துவது போன்ற வலி உண்டாகும். பின்னர் மாரடைப்பு வரும். மூளைக்குச் செல்லும் இரத்த நாளத்தில் கொழுப்பு அடைபட்டால் அது பக்கவாதமாகும். இவ்வாறே சிறுநீரகம், கண்கள், கால்கள் போன்ற உறுப்புக்களுக்கு செல்லும் இரத்த ஓட்டம் தடைப்படும்போது அவ்வுறுப்புகளின் செயலிழப்பையும் பாதிப்பையும் உண்டாக்கும்.

இரத்தம் வேகமாக இரத்த நாளங்களில் மோதுகிறபோது நாளங்கள் இரத்த ஓட்டத்தின் அளவுக்கு ஏற்ப சுருங்கவும் விரியவும் வேண்டியிருக்கும்.

ஒருமுறை இருமுறை என்றால் பரவாயில்லை. தினந்தோறும் ஆண்டுக்கணக்கில் இப்படி நிகழ்வதுதான் வாடிக்கை என்றால் நாளங்கள் தங்களின் நெகிழ்வுத் தன்மையை இழந்து உக்குலைய ஆரம்பிக்கும்.

சில நேரங்களில் சிதைந்து இரத்தக் கசிவும் உண்டாகும்.

இதயத்தின் இடது வென்ட்ரிக்கில் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தப் போராடும். இந்த நிலையில் அதிகப்படியான வேலைப் பளுவை தன் மீது தூக்கிப் போட்டுக் கொண்டு இரத்த நாளங்களை விரிப்பதும் சுருக்குவதுமாக மாறி மாறி செயற்பட்டு தளர்ந்து கடைசியில் செயற்படும் சக்தியை இழந்து போகும். இதைத் தான் ஹார்ட் பெயிலியர் என்கிறார்கள்.

மாரடைப்பை உண்டாக்குவதில் மிகை இரத்த அழுத்தமும் நீரிழிவு நோயும் இணைந்து செயற்படக்கூடியவை. இவை இரண்டும் இருந்தால் மாரடைப்பு வரும் வாய்ப்பு அதிகமாகும்.

**அறிகுறிகள்**

இரத்த அழுத்தம் இருந்தால் சிலர் தலையைப் பிடித்துக் கொள்வார்கள். காரணம் தலைபாரம் வந்து விடுவது தான்.

பெரும்பாலானவர்களுக்கு தலைப்பாரம் தான் இரத்த அழுத்தத்தின்போது தெரிய

Health Care

**மருத்துவ உலகம்**

உங்கள் நலம் உங்கள் கைகளில்

**07**



வரும் பெரிய அறிகுறி.

மற்றப்படி இரத்த அழுத்தம் இருப்பது யாருக்கும் தெரிய வராது. பெரும்பாலும் மருத்துவப் பரிசோதனையின் போதுதான் இரத்த அழுத்தம் அதிகமிருப்பது கண்டறியப்படுகிறது.

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

ஒருவரின் இரத்த அழுத்தம் வெவ்வேறு நேரங்களில் வேறுபடலாம். அதனால் ஒருவருக்கு இரத்த அழுத்தம் உள்ளது என முடிவு எடுக்கும் முன்பு குறைந்தது மூன்று முதல் ஐந்து முறை வெவ்வேறு நேரங்களில் இரத்த அழுத்தம் கணக்கிடப்பட்டு, அதன் சராசரி அளவு இதயம் சுருங்கும்போது (சிஸ்டாலிக்) 140 மில்லிமீற்றர் பாதரசமாகவும் விரியும் போது (டயாஸ்டாலிக்) 90 மி.மீற்றர் பாதரசமாகவும் இருக்க வேண்டும். இது அதிகபட்ச அளவாகும். இதற்குக் கூடுதலாக அதாவது 140/90 இற்கு அதிகமாக இருந்தால் அவருக்கு மிகை இரத்த அழுத்தம் இருப்பதை உறுதி செய்யலாம்.

(தொடரும்)

# யானைக்கால்

மனிதர்களுக்கு கொசுக்களால் வருகின்ற தொல்லைகளை நாமறிவோம். நமக்குத் தெரிந்தது மலேரியா மட்டும்தான் கொசுக்களால் வருகின்ற பாதிப்பு என்று தெரிந்து வைத்துள்ளோம். இதனையும் தாண்டி ஓர் ஆபத்து உள்ளது. அதுதான் யானைக்கால் நோய் என்கின்ற பாதிப்பாகும். இந்த யானைக்கால் நோய்க்கு எலிபெண்டாஸிஸ் பைலோரியா என்று ஆங்கிலத்தில் பெயர்களும் இருக்கின்றன. இந்தப் பாதிப்பு இருப்பவர்களை நாம் எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியும். கால்கள் பெருத்து வீங்கிப் போனது போன்று காட்சியளிக்கும். பார்ப்பதற்கு யானையின் கால்களை போலவே இருப்பதனால்தான் இந்தப் பாதிப்பை நாம் யானைக்கால் நோய் என்று கூறுகின்றோம்.

இந்த யானைக்கால் எந்த வயதை சார்ந்தவருக்கும் வரலாம். என்றாலும் கூட அது குறிவைத்து தாக்குவது இருபது வயது முதல் முப்பது வயதிருக்கும் பருவத்தினரைத்தான் அதிகம் தாக்குகின்றது. இந்தப் பாதிப்பு முழுக்க கொசுவினால் வருகின்ற பாதிப்பாகும். ஆண்கள், பெண்கள் எவரை வேண்டுமானாலும் இந்த யானைக்கால் பாதிப்பு தாக்கலாம். சுகாதாரக்குறைவும் அசுத்தம் நிரம்பிய சுற்றுப்புற சூழ்நிலைகளில் வசிப்பவர்களுக்கும் தான் இதன் பாதிப்பு அதிகமாக வருகின்றது என்றே குறிப்பிட வேண்டும். தமிழ் நாட்டில் குறிப்பிட்ட பகுதிகளில் இந்தப் பாதிப்பு அதிகமாக உள்ளது.

எந்தப் பகுதிகளில் சுயசுகாதாரம் அதிகமாகப் பேணி பாதுகாக்கப்படவில்லையோ அங்கு எல்லாம் கழிவு நீர் ஆற்றுப் பெருக்கென ஓடிக்கொண்டிருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த யானைக்கால் பாதிப்பு அதிகமாக இருப்பதை பார்க்க முடிகின்றது. தமிழ் நாடு அரசு தனது குடும்பநலம் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் வாயிலாக யானைக்காலை முற்றிலுமாக ஒழிக்கும் திட்டத்திற்கென்று பல இலட்சம் ரூபாய் செலவிட்டு வருகின்றது. தமிழகத்தில்கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் இந்த யானைக்கால் பாதிப்பிற்கு பெயர் போனதாக திகழ்கின்றன. நமக்கு அண்மையில் இருக்கின்ற புதுச்சேரியும் கூட யானைக் கால் பாதிப்பிற்கு பெயர் பெற்றதாக உள்ளது.

**யானைக்கால் பாதிப்பிற்கு கொசுக்கள் தான் காரணம் என்றால் இந்தக் கொசுக்கள் எப்படியானைக் காலை ஏற்படுத்துகின்றன?**

விச்செரரியா பாங்கிராப்டை என்கின்ற ஒரு வகையான புழுக்கள் தாம் இந்தப் பாதிப்பை தோற்றுவிக்கின்றன. இந்தப் புழுக்களுக்கு உருண்டைப்புழுக்கள் என்று பெயராகும். கொசுக்களில் பல வகைகள் இருப்பதை நாமறிவோம். இந்த வகைவகையான கொசுக்களில் ஒன்றுதான் கியூலெக்ஸ் என்கின்ற யானைக்காலை பரப்புகின்ற வேலையை செய்கின்றன. இந்த கியூலெக்ஸ்வகை கொசுக்கள் மனிதர்களைக் கடிக்கும் போது அவற்றின் வழியாக இந்த யானைக்கால் பாதிப்பு வந்துவிடுகின்றது. ஒரு சிலரின் நிணநீர் ஓட்டத்தில் விச்செரரியா பாங்கிராப்டை என்கின்ற உருண்டைப்புழுக்கள் நீந்திக் கொண்டிருக்கும். அங்கு இந்த உருண்டை புழுக்கள் வளர்ச்சியடைய முடியாது. எனவே, இரவு நேரத்தில் இரத்தத்தின் மேற்பரப்பில் நீந்திக் கொண்டிருக்கும் அவ்வேளையில் இந்த விச்செரரியா பாங்கிராப்டை உருண்டைப் புழுக்கள் கண்ணுக்குத் தெரியாத கோடிக்கணக்கான குட்டிப்புழுக்களை தோற்றுவிக்கும். இவற்றிற்கு மைக்ரோபைலேரியா என்று பெயராகும். மனிதர்களை கியூலெக்ஸ் வகைக் கொசுக்கள் இரவு நேரத்தில் கடிக்கும்போது இந்தக் கொசுக்களின் உறிஞ்சு குழாய்கள் மூலமாகக் கண்ணிற்குத் தெரியாத அந்தக் குட்டி உருண்டைப் புழுக்கள் மைக்ரோபைலேரியா கொசுவின் வயிற்றில் குடி புகுந்து விடும். பின்னர் அக்கொசுக்களின் வயிற்றில் ஆபத்தான கிருமியாக உருமாறி விடும். இத்தகைய கொசுக்கள் மற்றவர்களைக் கடிக்கும்போது அவர்களின் இரத்தத்தின் வழியாக இந்தக் கிருமிகள் உள்ளே சென்று யானைக்கால் நோயினை உண்டாக்கிவிடும்.

இந்தக் கொசுக்கள் கடித்தவுடன் இதன் பாதிப்பு நமக்குத் தெரியவராது. அதாவது இந்தக் கொசு கடித்த மூன்று மாதம் கழித்துத்தான் இதன் பாதிப்பு மெல்ல மெல்ல சில வகையான அறிகுறியாக நமக்குத் தெரிய ஆரம்பிக்கும். யானைக்கால் நோயின் முதல் அறிகுறி என்ன தெரியுமா? கடுமையான காய்ச்சல் ஏற்படும். அநேகமாக இது குளிர் காய்ச்சல் வகையைச் சேர்ந்ததாக இருக்கும். தினமும் இரவு நேரத்தில் மட்டும் இப்படியான காய்ச்சல் ஏற்படும். இக்காய்ச்சல் தொடர்ந்து சில வாரங்கள் வரை இருக்கும். மேலும் பைலேரியா கிருமிகள் பாதித்த இடங்களில் அலர்ஜி போன்று சிவந்து தடிப்பும் ஏற்படும். அந்த இடங்களில் அரிப்புகூட இருக்கலாம். குளிர் காய்ச்சல் வரும்போது தொடை, கால் இடுக்கு, அக்குள் போன்ற இடங்களில் நெறி கட்டிக் கொண்டு வலியும் இருக்கும்.

யானைக்கால் நோயின் அறிகுறிகளில் ஒன்று பிறப்புறுப்புகள் வீக்கம்கொண்டு அவ்விடங்களில் வலிகூட இருக்கும். இவ்வாறான முன்அறிகுறிகளை அடையாளம் கண்டு கொண்டு உடனேயே தீவிரமாக மருந்து மாத்திரைகளை உட்கொண்டு வந்தால் யானைக்கால் நோயினை ஆரம்பத்திலேயே முறியடித்து விடலாம். இல்லையெனில் பின்னாளில் யானையின் காலைப் போன்று கால் வீக்கத்துடன் அலைய வேண்டியதுதான்.

ஆரம்பத்திலேயே இந்த அறிகுறிகளைக் கண்டு முழுவதுமான சிகிச்சை செய்து கொள்ளாவிட்டால் இவர்கள் ஆயுள் வரையிலும் யானைக்காலுடன்தான் இருக்க வேண்டியிருக்கும். கால்கள் பெருத்துப் போய்விடும். காலின் எடையும் அதிகரித்துவிடும். மற்றவர்களைப் போல சகஜமாக இவர்களால் நடமாட முடியாமல் போய்விடும். இந்த யானைக்காலில் நாளடைவில் வீக்கம் அதிகமாகிப்போய் வலியும் வெடிப்புகளும் உண்டாகலாம். இந்த வெடிப்புகளிலிருந்து சீழ் வடிந்து வேதனைப் படுத்தும். இதெல்லாம் தேவைதானா?

இந்த நோய் இருப்பதை வைத்தியர்கள் எப்படி உறுதி செய்கிறார்கள். நோயாளிகளின் தொடர்ந்த குளிர் காய்ச்சல் வருகின்ற இரத்தத்தை சோதனை செய்து பார்த்ததால் இவர்களின் இரத்தத்தில் மைக்ரோ பைலேரியா கிருமி இருப்பதுதெரிந்தால் இவர்கள் யானைக்கால் நோயாளிகள் என்று வைத்தி யர்கள் முடிவு செய்வார்கள்.

யானைக்கால் நோய்க்கென்று இன்னும்

**01**



கூட ஒரே ஒரு மருந்து தான் இருக்கின்றது. இந்த யானைக்கால் மருந்திற்கு டை எத்தில் கார்பமெஸின் ஸிட்ரைட் என்று பெயராகும். யானைக்கால் ஆரம்ப நிலையில் தொடர்ந்து மூன்று வாரங்கள் தொடர்ச்சியாக இந்த மருந்தினை சாப்பிட்டு வந்தால் போதும். ஆரம்ப நிலையிலேயே இந்த யானைக்கால் நோயை குணப்படுத்தி விடலாம்.

இந்த யானைக்கால் நோயின் ஆரம்பத்தில் இருப்பவர்கள் படுக்கும்போது கால்களை ஒரு தலையணையின்மேல் தூக்கி வைத்துக் கொண்டு படுப்பது நல்லது. மேலும் வீங்கியிருக்கும் கால்கள் மேலும் வீங்காமல் இருக்க வேண்டி எலஸ்டோ கிரப் பாண்டேஜ் துணிகளை கால்களை சுற்றி இறுக்கமாகக் கட்டிக் கொள்ள வேண்டும். மேற்சொன்ன மருந்துகளுடன் நோய் எதிர்புத் திறனைக் கூட்டும் சில மருந்துகளும் குளிர் காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளையும் உட்கொள்ள வேண்டியிருக்கும்.

சரி ஆரம்ப நிலையில் இந்தப் பாதிப்பை முற்றிலுமாக குணப்படுத்திவிடலாம். முற்றிலுமாக கால் யானையின் காலைப் போல் பம்மென்று வீங்கிப் போய்விட்டால் என்ன

டாக்டர் வி.பார்த்தசாரதி,MD.,
சென்னை-45.


செய்வது?

முன்பெல்லாம் இதற்கு எந்தத் தீர்வும் இல்லாமல் இருந்தது. இப்போது நவீன பிளாஸ்ரிக் சிகிச்சை துறையின் மூலமாக பெருத்து இருக்கம் யானைக்காலில் தேவையற்ற சதைப் பகுதிகளைக் கழித்துவிட்டு சரி செய்யும் மருத்துவ முறை பிரபலமாக உள்ளது. பிரிவென்ஷன் ஈஸ் பெட்டர் தென் கியூர் என்பது போல நோய் வந்து அவதியுற்று அதனை குணப்படுத்திக் கொள்வதைவிட நோயே வராமல் பாதுகாத்துக் கொள்வது எவ்வளவு நல்லது. உங்களின் சுற்றுப் புறத்தை சுத்தம் நிரம்பியதாக வைத்திருங்கள். நீங்கள் ஆரோக்கியமாக வாழத்தான் வீடும் தெருவுமே தவிர கொசுக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு அல்ல.

(முற்றும்)

# நுவரெலியாவில் தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு சதித்திட்டம் தீட்டப்படுகின்றது

## மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

தற்சமயம் நுவரெலியா மாவட்டத்தின் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஐவர் தமிழர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலைமையை மாற்றி நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு மாற்றுவழியில் சதித்திட்டம் தீட்டப்படுகின்றது.

இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட தமிழ்மக்களும் மலையக கட்சிகளும் தொழிற்சங்கங்களும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

ஆளுமையுடன் செயற்பட்டு வரும் ஆபத்துக்களை தடுத்து நிறுத்தாவிட்டால் எதிர்காலத்தில் வாய்மூடி மௌனிகளாக இருப்பதற்குக்கூட நமது மலையக அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தில் இடமிருக்கப் போவதில்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

தனது பிறந்த தினத்தையிட்டு தன்னை சந்தித்த முன்னணியின் நுவரெலியா மாவட்ட மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தலைமையிலான மலையக ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு காலத்தில் யாழ். மாவட்டத்தில் பன்னிரெண்டாக இருந்த ஒட்டுமொத்த பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இன்று ஆறாக குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு வாக்காளர் தொகையில் ஏற்பட்ட குறைவு காரணமாகக் காட்டப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்பாகும்.

தகுதியுள்ள தமிழர்களை வாக்காளர்களாக பதிவு செய்வதில் குளறுபடிகளை ஏற்படுத்தி தமிழ் வாக்காளர் தொகை அதிகரிக்கப்படாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தை தளமாகக் கொண்டு மலையகம் அனைத்து தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகளில் திட்டமிட்டு பெரும்பான்மையினரை குடியேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழர்கள் செறிவாக வாழ்வதை தடுப்பதன்மூலம் எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரக்கூடிய புதிய தேர்தல் முறையின் கீழ் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை நுவரெலியா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்வதில் பெரும் நெருக்கடி ஏற்படும்.

அரசாங்கத்திற்குள்ளே அமைச்சர்களாகவும் ஆதரவு அணியினராகவும் செயற்படும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மலையக அரசியல் கட்சிகளுக்கும் இது தொடர்பிலே பாரிய பொறுப்புக்கள் இருக்கின்றன. (அ-2)

# தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை வேண்டும்

## ரணில் சபையில் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறி கொத்த மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணை மேற்கொள்ளுமாறு அக்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் நாடாளுமன்றில் நேற்று கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் கட்சியிடமிருந்தும் மக்களிடமிருந்தும் மன்னிப்பு கோருவதாக விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் பதவியில் எந்தவித மாற்றமும் ஏற்படாது என ஏற்கனவே நான் நாடாளுமன்றத்தில் உறுதியளித்துள்ளேன். இது தொடர்பில் இன்றும் என்னால் மீண்டும் உறுதிப்படுத்தமுடியும் என பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்க தரப்பு உறுப்பினர்களின் கரகோஷத்துக்கு மத்தியில் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி தலைவராக தனது பதவியை தக்க வைத்துக்கொள்ள முடிந்தபோதிலும் சில ஆர்ப்பாட்டக்காரர்களால் தனது வாகனம் சேதமடைந்ததாகவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நாங்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம். சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். நடுநிலைமையான விசாரணை மேற்கொள்ளுமாறு நான் கேட்கின்றேன் .எந்தவித தலையீடுகளுமின்றிய விசாரணையே எனக்குத் தேவை. இந்த சம்பவம் குறித்து நான் மனவருத்தம் அடைகின்றேன். இந்தச் சம்பவத்தை தடுத்து நிறுத்த என்னால் முடியாமல் போன நிலையில் மக்களிடமிருந்தும் கட்சியிடமிருந்தும் நான் மன்னிப்பு கோருகின்றேன் என ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து பொய்க்குற்றச்சாட்டுகள்



## எதிர்க்கட்சிகளை சாடுகிறார் தினேஷ்

(கொழும்பு)

உயர் பாதுகாப்புவலயம் மற்றும் இராணுவ முகாம்கள் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகளினால் சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஆளும் கட்சியின் பிரதமகொறடா தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவ முகாம்கள் மட்டுமே காணப்படுவதாகவும் படையினர் வேறு இடங்களை ஆக்கிரமிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் இராணுவ முகாம்கள் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற்ற முடியாது என்பதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சகல டடங்களும் ஏனைய சொத்துக்களும் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-2)

# சீரற்ற காலநிலையால் வன்னி மக்களின் இயல்பு நிலை பாதிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் சனிக்கிழமை அதிகாலை சுழியொன்றில் சிக்கி கவிழ்ந்த படகில் இருந்து காணாமல் போயுள்ள ஒருவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அங்குள்ள மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மூங்கிலாறு, நாவலடியாறு, காளி கோவிலாறு ஆகிய மூன்று சிற்றூர்களும் பெருக்கெடுத்து ஓடுகின்ற வெள்ள நீரைக்கடந்து பெரிய வாகனங்கள் மட்டுமே மிகுந்த கஷ்டத்துடன் போக்குவரத்தில் ஈடுபடுவதாகவும் சிறிய வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்களில் செல்பவர்களும் நடந்து செல்பவர்களும் வீதியைக் கடந்து செல்ல முடியாதிருப்பதாகவும் அவர் கூறினார்.இருப்பினும் துணிந்தவர்கள் மாத்திரமே சைக்கிள்களில் தூக்கிக் கொண்டு மிகுந்த சிரத்துடன் இந்த வெள்ள நீரைக் கடந்து செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவு அடைமழை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பள்ளமான பிரதேசங்களைச் சேர்ந்த கிராமமக்கள் வீடுகளில் வசிக்க முடியாதவாறு நிலம் ஊற்றெடுத்துள்ளதுடன் பல இடங்களில் வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

நீரோட்டம் மிகுந்த பகுதியாகிய கிளிநொச்சி நகருக்குத் தெற்கே ஏ-9 வீதியின் இருமருங்கும் ஒரே வெள்ளக்காடாக காணப்படுவதாகவும் பல இடங்களில் வீதிகளை வெள்ளம் மூடிப்பாய்வதனால் போக்குவரத்து க்கள் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ9 வீதி மட்டுமன்றி வன்னிப் பிரதேசத்தின் நகரங்களுக்கிடையிலான இணைப்பு வீதிகள், முக்கிய இடங்களுக்கான வீதிகள் மழையினாலும் வெள்ளத்தினாலும் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதனால் பேருந்து சேவைகள் குறைந்திருப்பதாகவும் மழைநீர் நிறைந்து காணப்படும் குன்றுகுழிகள் காரணமாக பேருந்துகள் மிகவும் மெதுவாகவே செல்ல வேண்டியிருப்பதாகவும் இதனால் பயணிகள் பல மணித்தியாலயங்கள் தாமதமாகவே தாங்கள் செல்லுமிடங்களுக்குச் செல்ல நேர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு மீனவர்கள் தொழிலுக்காகச் சென்ற இந்த மீன்பிடி படகு சுழியொன்றில் சிக்கி கவிழ்ந்ததையடுத்து மீனவர்கள் இருவரும் சுழியில் சிக்கியதாகவும் அவர்களில் ஒருவர் தப்பி கரையை வந்தடைந்ததாகவும் மற்றவரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை கடந்த மூன்று தினங்களாக நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதாகவும் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்றும் தொடர்ந்து மழை பெய்து வருவதாகவும் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். .(அ-2)


# போதைப்பொருள் கடத்தல்; மீனவர்களுக்கு விளக்கமறியல்

இந்தியாவிலிருந்து இலங்கையின் நெடுந்தீவு கடற்பரப்பிற்கு போதைப்பொருள் கடத்தியதான குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட இலங்கை, இந்திய மீனவர்கள் 8 பேரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் எஸ்.கஜநிதிபால நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இந்த மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் கொழும்பு இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை இன்னமும் தயாரிக்கப்படவில்லை என பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்தே அவர்களை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்ட வர்களில் இலங்கை மீனவர்கள் மூவரும் இந்திய மீனவர்கள் ஐவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தொடரும் காலநிலைச் சீர்கேட்டால் யாழ். மக்கள் வெள்ளத்தில் தத்தளிப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனத்த மழையினால் குடாநாட்டின் இயல்புநிலை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. கனமழை காரணமாக மாணவர்கள், வியாபாரிகள் அனைவரும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

நல்லூர் யமுனா ஏரிப்பகுதி, பொம்மைவெளி, காக்கைதீவு, நாவாந்துறை, அரியாலை, கொட்டடி மீளக் குடியமர்ந்த கிராமங்கள் என அனைத்துப் பகுதிகளிலும் வெள்ளம் தேங்கியதால் இப்பிரதேச மக்கள் சில இடங்களில் இடம்பெயர வேண்டிய அவல நிலைக்கும் உள்ளாகினர்.

இதைவிட யாழ். பட்டணப் பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் உடுப்பு வியாபாரிகள், பழக்கடை வியா பாரிகள் என அனைவரும் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே தமது வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சில இடங்களில் வெள்ளம் ஓடாது தேங்கி நிற்பதற்கு வடிகால்களை துப்புரவு செய் யாமையே பிரதான காரணம் எனவும் பிரதான வீதிகள் முதல் கொண்டு சிறிய ஒழுங்கைகள் வரை வீதிகள் சேதமடைந்துள்ளன.

இவ்வீதிகளில் சிறுசிறு குழி களை மட்டும் பெயரளவில் புனரமைத்து விட்டு பாரிய குழிகளை காட்சிப் பொருளாக விட்டுள்ளனர் என யாழ். பட்டணப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடிசைகள், கூடாரங்களில் வாழும் மக்கள் குறிப்பாக பொம்மைவெளிப் பகுதி மற்றும் யமுனா ஏரிப் பகுதிகளில் வெள்ள நீர் கிணறுகளுக்குள்ளும் மலசல கூடங்களுக்குள்ளும் கலப்பதாகவும் இதனால் நோய்த் தொற்றுக்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன.

மேற் குறிப்பிட்ட பகுதி களில் ஏற்கனவே டெங்கு நோயினால் இறப்புக்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் அறிவிக்கப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதைவிட க.பொ.த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் வீதிகளின் சீரின்மையால் பரீட்சை நிலைகளுக்கு செல்லும் போது பெரும் அபாயங்களை எதிர்நோக்குகின்றனர் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். அத்தோடு வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியிலும் நேற்று முன்தினமிரவு இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-4)


## பாராட்டி வாழ்த்தல்



குகன் கல்வி நிறுவன
ஸ்தாபகரும்
ஓய்வு பெற்ற அதிபரும், E.P.D.P
யின் அச்சுவேலி பிரதேச அபிவி
ருத்தி குழுத் தலைவருமாகிய
உயர் திரு. சபாபதி குகதாசன்
அவர்கள் அகில இலங்கை
சமாதான நீதவானாக
சத்தியப்பிரமாணம் செய்ததை
யிட்டு வாழ்த்துகின்றோம்.

(6997)

வாழ்த்துவோர்:-
வலிகாமம் கிழக்கு அச்சுவேலி அமைப்பாளர்
S.P.M. தர்மராசாவும் (JP)
தோழர்களும்



## வலம்புரியின் சேவை பல்லாண்டு காலம்தொடர வாழ்த்துகின்றேன்

ஆழ்கடல் மேற்பரப்பில் அலையிருக்கும் ஆனாலும் அடிப்பரப்பில் அமைதி இருக்கும். எத்தனையோ துன்பங்களுக்கு தமிழ் நெஞ்சங்கள் முகம் கொடுத்த போதிலும் அறிவுப் பசியின் தேடலுக்கு அமைதியாக அன்னப்பட்சி போன்று அரிய பொக்கிஷங்களில் இருந்து அனுதினம் நல்லனவற்றை தெரிந்தெடுத்து வழங்கிவரும் வலம்புரியே! இன்று அகவை பதின்மூன்றில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் உனது சேவையை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். உனது சங்கொலி எட்டுத்திக்கும் கீதையை தந்த அந்த பரந்தாமன் கை வலம்புரிச் சங்காக ஒலித்து துன்பத்தில் துவண்டு அமைதி இழந்த தமிழர் நெஞ்சங்களுக்கு அமைதி தழைத்திட பல்லாண்டு காலம் தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

குப்பி விளக்கில் கல்வி பயின்ற மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டிற்காக, கலாசார சீரழிவிற்காக, இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட போது காகிதாதிகள் கிடைப்பதில் சிரமம் இருக்கையிலும் ஆற்றிய அரும் பணிக்காக எம் நெஞ்சத்தில் நீங்கா இடம் பிடித்த உனது சேவை இறைபணிக்கு நிகர் என்பதில் என்றும் ஐயமில்லை.

எஸ்.நடராஜா
முகாமையாளர்,
சிற்றிஸன் டிவெலப்மென்ட் பிஸினஸ் பீஎல்சி,
யாழ்ப்பாணம்.


## ஊர்காவற்றுறை பிரதேச சபை வரவு செலவுத்திட்டம் -2012

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பொதுமக்கள் 22ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு உப அலுவலகங்களில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

### ஊர்காவற்றுறை பிரதேசசபை

### 2012 ல் மேற்கொள்ள எதிர்வுகூறப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள்

| | | விபரம் | நிகழ்ச்சித் திட்டம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | | பிரமாண அடிப்படையிலான மூலதன நன் கொடை நிதி-CBG | | | |
| | அ | பிரதேச சபை தலைமை செயலகத்துக்கான களஞ்சிய அறை நிர்மாணித்தல் | 1 | 1,800,000.00 | 1,800,000.00 |
| 2 | | குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை நிதி PSDG | | | |
| | அ | நாரந்தனை பொது நூலகத்துக்கான கட்டடம் அமைத்தல் | 6 | 2,220,000.00 | |
| | ஆ | ஊர்காவற்றுறை சந்தியில் மரக்கறி விற்பனை நிலையத்துக்கான கட்டடம் அமைத்தல் | 5 | 2,050,000.00 | 4,270,000.00 |
| 3 | | சபை நிதி -Council fund | | | |
| | அ | அனலைதீவு இந்து மயானம் புனரமைப்பு | 6 | 1,000,000.00 | |
| | ஆ | ஊர்காவற்றுறை சென்ஜேம்ஸ் சனசமூக நிலையம் புனரமைப்பு (கட்டம் -1) | 6 | 450,000.00 | 1,450,000.00 |
| 4 | | வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்படுத்தல் திட்டம் -NELSIP-2011 | | | |
| | அ | நாரந்தனை செட்டியாந்தோட்ட வீதி புனரமைப்பு | 3 | 5,189,941.97 | |
| | ஆ | நாரந்தனை சூரியாவத்தை வீதி புனரமைப்பு | 3 | 9,201,285.44 | |
| | இ | ஊர்காவற்றுறை முகாம் விதி புனரமைப்பு | 3 | 6,761,963.63 | 21,153,191.04 |
| 5 | | வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்படுத்தல் திட்டம் -NELSIP-2012 | | | |
| | அ | நாரந்தனை சின்னமடு 1 ம் 2 ம் வீதி புனரமைப்பு | 3 | 10,370,000.00 | |
| | ஆ | நாரந்தனை உதறாப்பட்டி வீதி புனரமைப்பு | 3 | 9,720,000.00 | |
| | இ. | புளியங்கூடல் வடக்கு வீதி புனரமைப்பு | 3 | 25 ,760,000.00 | |
| | ஈ | நாரந்தனை கணேசா பாடசாலை வீதி புனரமைப்பு | 3 | 590,000.00 | 46,440,000.00 |
| | | மொத்தம் | | | 75,113,191.04 |

செயலாளர், ஊர்காவற்றுறை
பிரதேச சபை.

தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

# பகவத்கீதைக்கான தடைமனு விசாரணை ஒத்திவைப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவில் பகவத்கீதை நூலுக்குத்தடை விதிக்கக் கோரிய மனுவை விசாரித்த நீதிமன்றம், தீர்ப்பு வழங்குவதை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

பகவத்கீதையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் வன்முறையையும் தீவிரவாதத்தையும் தூண்டும் வகையில் அமைந்துள்ளதாகவும் அதை ரஷ்யாவில் தடை செய்ய வேண்டும் என்றும் கிறிஸ்தவ அமைப்பொன்றைச் சேர்ந்த சிலர் ரஷ்யாவின் டோம்ஸ்க் நகரில் உள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யாவில் செயற்படும் இஸ்கான் அமைப்பைச் சேர்ந்த சாது பிரியா தாஸ் இந்திய செய்தி நிறுவனம் ஒன்றிடம் கூறியதாவது,

இந்த நூல் குறித்து மொஸ்கோவிலும், செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிலும் உள்ள இந்தியாவின் வரலாறு, கலாசாரம், இலக்கியம் ஆகியவற்றை நன்கு அறிந்த அறிஞர்களிடம் நீதிமன்றம் கருத்துக் கேட்க வேண்டும் என கோரிக்கை விடுத்தோம். அதை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், தீர்ப்பை டிசெம்பர் 28 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

இதற்கிடையே ரஷ்ய குறைத்தீர்ப்பாயத் தலைவர் விளாடிமிர் லுகின் சர்வதேச அளவில் பெரும் மதிப்பு அளிக்கப்படும் இந்த நூலைத் தடை செய்யக்கூடாது என்று கருத்து தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் வாழும் இந்தியா, வங்கதேசம், நேபாளம் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த இந்துக்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு நடத்திய ஆலோசனைக்கூட்டத்தில் ரஷ்ய இந்துக்கள் குழு என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளனர். அதன் தலைவராக சாது பிரியாதாசை தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக இந்திய தூதரகத்தின் உதவியைக் கோரியுள்ளோம். பிரதமர் மன்மோகன் சிங்கின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளோம். விரைவில் இந்த வழக்கு இரத்து செய்யப்படும் என நம்புகிறோம் என்று கூறினார். (அ-2)


# இராணுவ உயரதிகாரிகள் பதவி விலகக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

எகிப்து நாட்டில் இராணுவ உயர் அதிகாரிகள் பதவி விலகக்கோரி தலைநகர் கெய்ரோவில் கடந்த சில நாட்களாக ஆயிரக்கணக்கான பொது மக்கள் திரண்டு போராட்டம் நடத்துகிறார்கள். இராணுவத்துக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே பல்வேறு மோதல்கள் நடந்து10 பேர் பலியானார்கள். 300 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

எகிப்தில் நடைபெற்றுவரும் இந்த வன்முறை சம்பவங்களுக்கு அமெரிக்க வெளியுறவு துறை மந்திரி ஹிலாரி கிளின்டன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில்,

எகிப்தில் நடைபெறும் வன்முறை மிகவும் கவலை தருகின்றது. பொது மக்கள் அமைதியான முறையில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். வன்முறைகளை தவிர்க்க வேண்டும். அதேநேரத்தில் போராட்டம் நடத்துவோரின் பாதுகாப்பு உரிமைகளுக்கு எதிராக பாதுகாப்பு படையினரும் நிர்வாகமும் செயற்படுவதை தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (அ-2)






ரஷ்யாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள கஜகஸ்தான் நாட்டின் ஜனாதிபதி நூர்சுல்தான் நஸாபயொவ் (வலது) அந்நாட்டு ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவை மொஸ்கோ கிரம்ளின் மாளிகையில் சந்தித்து கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்க படைகள் அனைத்தும் ஈராக்கில் இருந்து வெளியேற்றம்

(குவைத்)

அமெரிக்கப் படைபிரிவுகள் அனைத்தும் ஈராக்கில் இருந்து வெளியேறின. கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பு ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அங்கு தீவிரவாதிகளை எதிர்த்து போராடி வந்தது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமாக பொறுப்பேற்ற பின் ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகள் படிப்படியாக வாபஸ் பெறப்படும் என்றார். அதேபோல அமெரிக்க படைகள் சிறிது சிறிதாக ஈராக்கில் இருந்து வெளியேறின. இந்த வகையில் அமெரிக்காவின் கடைசி படைபிரிவும் கடந்த ஞாயிறன்று ஈராக்கில் இருந்து வெளியேறியது. இதையடுத்து அமெரிக்க படைவீரர்கள் பெரு மகிழ்ச்சியுடன் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஈராக் போரில் 4 ஆயிரத்து 500 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சம் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். 80 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டது. ஈராக் கில் அதிபயங்கர உயிர்கொல்லி ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அந்நாட்டின் மீது அமெரிக்கா போர் தொடுத்தது.

ஆனால் அத்தகைய ஆயுதங்கள் எதுவும் அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஈராக் ஜனாதிபதி சதாம் உசேன் அமெரிக்கா நடத்திய இந்த போரில் கொல்லப்பட்டார்.

ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகள் விமானத்திலும் வீதி வழியாகவும் குவைத்துக்கு சென்றனர். வெளியேறுவதற்கு முன்னர் அவர்கள் ஈராக்கில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களையும் சோதனைச் சாவடிகளையும் நவீன பீரங்கிகளையும் அகற்றிவிட்டு சென்றனர். ஈராக் இராணுவத்திற்கு பயிற்சி அளிக்க 4 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் மட்டும் ஈராக்கில் தங்கி இருக்கிறார்கள். (அ-2)

# பர்வேஸ் முஷாரப் நாடு திரும்புவதாக அறிவிப்பு

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் அடுத்த மாதம் பாகிஸ்தானுக்கு திரும்பப் போவதாக அறிவித்துள்ளார். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில் முஷாரப் சரியாக ஒத்துழைக்காததால் அவரை லாகூரில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம் அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக அறிவித்தது.

தொடர்ந்து அவரது சொத்துக்களையும் முடக்கியது. இதற்கிடையில லண்டனில் இருந்தபடி முஷாரப் அடிக்கடி பேட்டிகளையும் அறிக்கைகளையும் வெளியிட்டு வந்தார். தனது அறிக்கையில் அடுத்தாண்டு மார்ச்சில் நாடு திரும்பப் போவதாக கூறி வந்தார்.

இது குறித்து நேற்று மூன்தினம் அவரது செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், அடுத்தாண்டு ஜனவரியில் முஷாரப் நாடு திரும்புகிறார். நாட்டின் தற்போதைய சூழல்தான் அவரை அடுத்த மாதமே நாடு திரும்பும் முடிவை எடுக்க வைத்துள்ளது என்றார். பாகிஸ்தான் அரசுக்கும் இராணுவத்துக்கும் ஏற்பட்ட மோதல் முற்றிவரும் நிலையில் மெமோகேட் விவகார விசாரணையும் ஆரம்பமாகியுள்ளது. (அ-2)

# இராணுவ உயர்ரதிகாரிகளை பதவி நீக்குவதற்கு திட்டம்

இங்கிலாந்து நாட்டின் இராணுவத்தில் உள்ள 700 உயர் இராணுவ அதிகாரிகளை பதவியில் இருந்து நீக்கம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.இதன்படி 2014 ஆம் ஆண்டில் முப்படைகளையும் சேர்ந்த 700 அதிகாரிகள் பதவி இழப்பார்கள். மேலும் 335 பேர் 2020 ஆம் ஆண்டுக்குள் நீக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசின் இரகசிய தஸ்தாவேஜுகள் மூலம் இந்த தகவல்கள் தெரிய வருவதாக இங்கிலாந்து பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த மாதம் உயர் இராணுவ அதிகாரிகளிடம் கருத்துக் கேட்டபோது,

அதில் மனிதவள சக்தியை குறைத்து நவீனமயமாக்குதலுக்கு உயர் அதிகாரிகளில் பலர் விருப்பம் தெரிவித்து இருப்பதாகவும் அதன் அடிப்படையில் அரசாங்கம் இந்த முடிவை எடுக்க முன்வந்துள்ளதாக கூறப்படுகின்றது. (அ-2)

# பயங்கரவாதிகளுடன் தொடர்பு; ஈராக் துணை ஜனாதிபதிக்கு பிடியாணை

ஈராக்கில் பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக எழுந்த குற்றச்சாட்டின் பேரில் அந்நாட்டு துணை ஜனாதிபதிக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வளைகுடா நாடான ஈராக்கின் துணை ஜனாதிபதியாக தாரிக் அல் ஹஸ்மி (வயது 65) உள்ளார்.

இவர் ஈராக்கின் ஷன்னி பிரிவு தலைவராக உள்ளார். இப்பிரிவினர் அந்நாட்டின் வடக்கே குர்தீஷ் இனத்தவர்கள் இணைந்து ஷியா பிரிவு அரசுக்கு எதிராக போராடி வருகின்றனர்.

இந்நிலையில் துணை ஜனாதிபதி தாரிக் அல் ஹஸ்மியின் நெருங்கிய பாதுகாவலராக இருந்த குர்தீஷ் இனத்தவர் சமீபத்தில் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு இருந்ததன் பேரில் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணையில் ஈராக்கில் பல்வேறு இடங்களில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு அந்நாட்டின் துணை ஜனாதிபதி தாரிக் அல் ஹஸ்மிக்கு தொடர்பிருப்பதாக தெரிவித்தார். இதன்மூலம் பயங்கரவாதிகளுக்கும் இவருக்கும் தொடர்பிருப்பதை கூறியுள்ளார்.

ஈராக்கில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் பல்வேறு அரச அலுவலகங்கள், அரச அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இதற்கு துணை ஜனாதிபதிக்கும் தொடர்பிருப்பதை கூறியுள்ளார். இந்த புகாரின் பேரில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஈராக்கின் 5 நீதிபதிகள் கொண்ட நீதித்துறை குழு துணை ஜனாதிபதி மீது கைது ஆணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது என்றார்.

தற்போது குர்தீஷ் இனத்தவர்களின் ஆதரவில் தாரிக்அல் ஹஸ்மி பதுங்கியிருப்பதாக இரகசிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் நாட்டை விட்டு தப்பியோடி விடாமல் இருக்க விமான நிலையங்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (அ-2)

## வடகொரியா கம்யூனிஸ்ட்கட்சியின் தலைவர் உயிரிழப்பு

வடகொரியாவின் சர்வாதிகாரியும் அந்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி தலைவருமான கிம் ஜாங் கடந்த 17 ஆம் திகதி மாரடைப்பால் காலமானார்.


வட கொரியாவில் 1994 ஆம் ஆண்டு முதல் நாட்டின் தலைவராக இருந்து வந்த கிம்ஜாங் உடல் நலக்குறைவு காரணமாக ஏற்பட்ட மாரடைப்பால் காலமானார்.

நாட்டின் தலைமைப் பொறுப்பேற்கவுள்ள தலைவரின் மகனான கிம் ஜாங் உன்னின் பின்னால் நாம் அணிதிரண்டு நமது ஒற்றுமையைக் காட்ட வேண்டும் எனவும் அரசு செய்தி நிறுவனம் கே.சி.என்.ஏ.மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

கிம்ஜாங் இல்லுக்குப்பின் அவரின் மகன் கிம்ஜாங் உன் அடுத்த தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்வார் என கடந்தாண்டு செப்டெம்பரில் அறிவிக்கப்பட்டது.

கிம் ஜாங் உன்னைப் பற்றி மிகக் குறைந்த தகவல்களே இதுவரை வெளிவந்திருக்கின்றன. அவர் சுவிற்சர்லாந்தில் படித்தவர் என்றும் அவருக்கு வயது 28 என்றும் தான் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## நீண்ட காதுகளால் கின்னஸ் சாதனை படைத்த நாய்



அமெரிக்காவை சேர்ந்த எட்டு வயதான ஹேபோ என்ற நாய் உலகிலேயே மிகவும் நீண்ட காதுகளைக் கொண்ட நாய்களின் வரிசையில் கின்னஸ் சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இந்த நாயின் வலது காதின் நீளம் 12.25" ஆகவும் இடது காதின் நீளம் 13.5 ஆகவும் காணப்படுகிறது. (அ-2)

நன்மையென்றும் தீமையென்றும் இல்லை.
அவ்விதம் ஆக்குவது மனமே.

– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பார்வையில்லாததால் ஏற்பட்ட போர் அதைப் பார்ப்பதற்குக் கண்ணா? கண்ணா!

பாரதப் போர் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் முடிந்தாயிற்று. துரியோதனனின் தந்தை திருதராட்டிரன் தாளாத வேதனையில் தவிக்கிறார். ஒருபுறம் தன் பிள்ளைகள். மறுபுறம் தன் தம்பி பிள்ளைகள்.

போரின் முடிபு எதுவாக இருந்தாலும் திருதராட்டிரனுக்கு நிம்மதியில்லை என்றாயிற்று. என்ன செய்ய முடியும்? பிறவியிலேயே கண் தெரியாமல் போனதன் விளைவாக இத்தனை துன்பம்.

துரியோதனின் தந்தை திருதராட்டிரனுக்குக் கண் தெரியுமாக இருந்தால், பாண்டுவுக்கு ஆட்சியதிகாரம் என்ற பேச்சுக்கே இடம் இருந்திருக்காது.

ஆக, திருதராட்டிரனுக்கு கண்ணை மறைத்து அவனை பாண்டுவுக்கு அண்ணனாக்கி அரச உரிமையில் பிரச்சினையை ஏற்படுத்தி பாரதப் போருக்கு வித்திட்ட மாயக் கண்ணனின் செயல் ஆச்சரியமானதுதான்.

இதில் மிகப்பெரும் ஆச்சரியம் என்னவெனில், குருஷேத்திரத்தில் போர் நடந்துகொண்டிருக்கும்போது,

வேதவியாசர், திருதராட்டினைச் சந்தித்து குருஷேத்திரத்தில் நடக்கும் போரை பார்ப்பதற்காக உனக்குக் கண் பார்வையைத் தர முடியும் என்று கூறுகின்றார்.

ஆ! கடவுளே! கண் பார்வையில்லாமல் போனதால்தான் போரே நடக்கிறது. அந்தப் போரைப் பார்ப்பதற்கு கண் பார்வையைத் தரமுடியுமாம். எப்படி இருக்கிறது நிலைமை?

வேதவியாசரின் கோரிக்கையை திருதராட்டிரன் அடியோடு மறுத்துவிடுகிறார்.

இக் கொடும்போரைப் பார்ப்பதைவிட நான் பார்வையற்றவனாகவே இருந்துவிடுகிறேன் என்று அவர் கூறிவிடுகின்றார்.

கண் தெரியக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது அது தேவையற்றதாகிவிடுகின்றது. இதுதான் தலைவிதி. இந்தத் தலைவிதியை ஏன்தான் இவ்விடத்தில் கூறுகிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியை நினைத்தபோது ஏற்பட்டதுதான்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலம் அஸ்தமனமாகும் என்பது தலைவிதி. அதை நிறைவேற்ற ரணில் விக்கிரமசிங்கவே தலைவராக வேண்டும்.

அதன் காரணமாக, ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு புதிய தலைவரை நியமிக்க வேண்டும் என எத்தனை முயற்சிகள் எடுத்தாலும் அது சரிப்பட்டு வருவதாக இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நல்ல எதிர்காலம் இருந்திருந்தால் அக்கட்சியின் உறுப்பினர்கள் கரு ஜெயசூரியவையே கட்சியின் தலைவராகத் தெரிவு செய்திருப்பர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருப்பதன் மூலமே அந்தக் கட்சியை விழுத்த முடியும் என்று இறைவன் நினைத்து விட்டான்.

ஆக, கரு ஜெயசூரியவை தோற்கடித்து ரணில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரானார்.

ஐக்கிய தேசியக் கட்சியை விட அரசை நேசிக்கும் ரணில் ஐயா! ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தலைவர் மட்டுமல்ல. அந்தக் கட்சியின் பத்தாம் இடத்து வியாழனும் அவர்தான்.

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்குகொள்ளவேண்டியது அவசியம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் தீர்வு காண அமைக்கப்படவுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசியம் பங்குபற்ற வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை நேற்று செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் சந்தித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என கூட்டமைப்பின்தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளமை மூத்த அரசியல்வாதியான சம்பந்தனின் இக்கூற்று எமக்கு மிகவும் கவலையளிக்கிறது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளிவந்துள்ள போதும் சர்வதேச விசாரணைக்கு சம்பந்தன் வலியுறுத்துகிறார். அறிக்கை தொடர்பில் எம்மோடு கலந்துரையாடாமல் ஏன் நாட்டிற்கு வெளியில் விசாரணைக்கு வலியுறுத்தவேண்டும். இதன் மூலம் உள்நாட்டு மீதான வெளிச் சக்திகளின் அழுத்தமே அதிகரிக்கும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஊழியர் சேமலாபநிதிய அங்கத்தவர்களுக்கு...

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களின் விரலடையாளம், தேசிய அடையாள அட்டையின் விம்பம் பெறுதல், புகைப்படம் எடுக்கும் செயற்பாடு நடைபெறவுள்ளது.

இச் செயற்பாட்டில் கலந்து கொள்ளவுள்ளவர்கள் தங்கள் பெயர், முகவரி, ஊழியர் சேமலாப நிதி இலக்கம், தொலைபேசி இலக்கம், பணியாற்றும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி என்பவற்றினை எதிர்வரும் ஆண்டு ஜனவரி 10 ஆம்திகதிக்குமுன்சமர்ப்பிக்கவேண் டும்.

இதனை தாங்கள் வசிக்கும் மாவட்டத் தொழில் அலுவலகத்திலோ அல்லது இல 143, நாவலர் வீதியில் அமைந்துள்ள பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகத்திலோ சமர்ப்பிக்க முடியும்.

இதற்கு முன் தொழில் தருநர்கள் உரிய வகையில் ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களுக்கு தெரியப் படுத்தாமை, குறிப்பிட்ட காலத்தில் அங்கத்தவர் உரிய பிரதேசத்தில் இல்லாமை மற்றும் தேசிய அடையாள அட்டை தெளிவின்மை போன்ற காரணங்களால் விரல் அடையாளம் பெறும் செயற்றிட்டத்தில் இதுவரை பங்கெடுக்க முடியாதவர்கள் இதில் பங்கெடுக்க முடியும் என வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

## வல்வை நகரசபை உறுப்பினர் ஊழல் செய்ததாக குற்றச்சாட்டு

### எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போர்க் கொடி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபையினால் கோரப்பட்ட மாட்டிறைச்சிக் கடைக்கான கேள்வி அறிவித்தலில் முறைகேடு இடம் பெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டியுள்ளன.

ஆளுந்தரப்பு உறுப்பினர் ஒருவர் ஒன்றரை இலட்சம் ரூபாயினை இலஞ்மாக பெற்று மாட்டிறைச்சிக் கடைக்கான அனுமதியை வேறொருவருக்கு கைமாற்றியமை ஆதாரத்துடன் கண்டுபிடிக்கப்பட்டதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டின. நேற்று நடைபெற்ற மாதாந்த கூட்டத்தின் போது இது தொடர்பான காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. இதனையடுத்து எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

சமூக நலன் ஒன்றிற்காகவென இளைஞர் ஒருவரிடம் இருந்து விண்ணப்பம் ஒன்றில் கையொப்பத்தைப் பெற்று கேள்விச் சபைக்கு அனுப்பி வைத்து அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திய ஆளும் தரப்பு உறுப்பினர் ஒருவர் அதன் மூலம் மாட்டிறைச்சிக் கடைக்கான உரிமத்தை பெற்று மற்றொருவருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாயிற்கு கைமாற்றியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது. (ஏ)

## மட்பாண்டக் கூட்டுத்தாபன ஊழியர்களை பணிநீக்கம் செய்யவுள்ளது அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கை மட்பாண்டக் கூட்டுத் தாபனத்தின் ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்கி அவர்களை பணிநீக்கம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊழியர்களின் கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் தயாசிறி திசேரா குறிப்பிட்டார்.

இதற்கமைய மட்பாண்டக் கூட்டுத் தாபனத்தில் கடமையாற்றும் சுமார் 600 ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்கி அவர்களை பணிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் 9 தொழிற்சாலைகளில் தற்போது நான்கு தொழிற்சாலைகள் மாத்திரமே செயற்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் எதிர்காலத் தில் தனியார் முதலீட்டாளர்களுடன் இணைந்து மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இந்தியப்பிரஜை கைது

இலங்கையில் விசா எதுவும் இன்றி சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த இந்திய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் நேற்று முன்தினம் மருதானை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

### பொன்சேகா

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிகிச்சைகளுக்காக கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு நேற்று அழைத்து வரப்பட்டார்.

தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள உபாதைக்கு சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இவர் நேற்றையதினம் வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.

ஊழல் மிகுந்த அரசியலை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என இதன் போது அவர் தெரிவித்தார். (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### *சிந்தனைத் துளிகள்*



உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றன வோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுல கிலோ எங்குமே கிடையாது.

இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.


நீ செய்த தவறுகளை வாழ்த்து; அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்! இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்!

உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதைக்குறித்து நீ கவலைப்பட வேண்டாம். இலட்சியத்தை பற்றிக்கொண்டு முன்னேறியபடியே இரு.

மற்றவர்களுக்கு நன்மையைச் செய்வது புண்ணியம். தீமை செய்வது பாவம்.

மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகிறானோ அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.

# முல்லைப்பெரியாறு அணை குறித்து தமிழகத்துடன் பேச கேரளம் தயார்



(திருவனந்தபுரம்)

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழகத்துடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக கேரள முதல்வர் உம்மன் சாண்டி தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் முல்லைப்பெரியாறு அணைக்கு பதிலாக புதிய அணை கட்டவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முல்லைப்பெரியாறு அணை தொடர்பான கருத்தரங்கில் உம்மன் சாண்டி மேலும் பேசியது.

மத்திய அரசு மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தமிழகத்துடன் பேசி முல்லைப்பெரியாறு அணைவிவகாரத்தைத் தீர்த்துக் கொள்ள கேரள அரசு தயாராகவுள்ளது. அணையில் இருந்து தமிழகத்துக்கு இப்போது எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறதோ அதே அளவு தண்ணீரை தர தயாராக இருக்கின்றோம்.

**புதிய அணை கட்டியே தீருவோம்**

அதேநேரத்தில் மக்களின் பாதுகாப்பு விடயத்தில் கேரள அரசு ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது. புதிய அணை கட்ட வேண்டும் என்ற முடிவை எப்போதும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்றார்.

**தண்ணீர் தருவோம்**

கேரளம் புதிய அணை கட்டினால் தமிழகத்துக்கு தண்ணீர் கிடைக்காது என்று கூறப்படுவது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் தமிழகத்துக்கு அளிக்கக் கூடிய தண்ணீரை உறுதி செய்து ஒப்பந்தம் மேற்கொள்ளவும் கேரளம் தயாராக இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் கேரள அரசு மிகவும் நியாயமாக நடந்து வருகின்றது.

**தமிழர்கள் தாக்கப்படவில்லை**

முல்லைப்பெரியாறு பிரச்சினையை மையமாக வைத்து கேரளத்தில் ஒரு தமிழர் மீது கூட தாக்குதல் ஏதும் நடக்கவில்லை. அதே நேரத்தில் தமிழகத்தில் மலையாளிகளுக்கு எதிராக தாக்குதல்கள் நிகழ்வது கவலையளிக்கின்றது. அதே நேரத்தில் கேரளத்துக்கு வரும் தமிழர்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் மூலம் நியாயமான தீர்வு கிடைக்கும் என்பதில் நம்பிக்கையுள்ளது. அதேநேரத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் தாமதமாவது கவலையளிக்கின்றது. ஏனெனில் இது கேரளத்தில் வாழும் இலட்சக் கணக்கான மக்களின் உயிர் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயம் என்றார். (அ-2)

# சசிகலா நீக்கம் அ.தி.மு.க.கொண்டாட்டம்

இந்திய மாநிலமான தமிழகத்தின் ஆளும்கட்சியான அ.தி.மு.கவை விட்டு சசிகலாவை முதல்வர் ஜெயலலிதா நீக்கியுள்ளதால் அ.தி.மு.கவினர் பெரும் உற்சாகமடைந்துள்ளனர்.

இதையடுத்து மாநிலத்தின் பல பகுதிகளிலும் ஆளும்கட்சியினர் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடியுள்ளனர்.

ஜெயலலிதாவின் நிழலாக திகழ்ந்து வந்த சசிகலாவை நேற்று முன்தினம் அதிரடியாக கட்சியை விட்டு நீக்கிய ஜெயலலிதாவின் செயல் அ.தி.மு.கவினரிடையே பெரும் ஆச்சரியத்தையும் அதேசமயம் சசிகலாவின் ஆதிக்கத்தால் கடும் புழுக்கத்தில் இருந்த அ.தி.மு.கவினருக்கு பெரும் சந்தோசத்தையும் கொடுத்துள்ளது.

சசிகலா நீக்கப்பட்டார் என்ற செய்தி பரவியதும் மாநிலத்தின் பல பகுதிகளில் அ.தி.மு.கவினர் அதைக் கொண்டாடியுள்ளனர்.

திருப்பூரில் எம்.ஜி.ஆர் சிலை முன்பு கூடிய அ.தி.மு.கவினர் பட்டாசு வெடித்தனர். பின்னர் எம்.ஜி.ஆர் சிலை முன்பு அமர்ந்து மொட்டை போட்டுக்கொண்டனர். இனிப்புகளையும் வழங்கினர்.

இதேபோல திண்டி வனத்திலும் அ.தி.மு.கவினர் பட்டாசு வெடித்துக் கொண்டாடியுள்ளனர். (அ-2)

# முல்லைப்பெரியாறு விடயத்தில் மத்திய அரசு இரட்டைவேடம்

## விஜயகாந் குற்றச்சாட்டு

கூடங்குளம் விவகாரத்தில் அப்துல் கலாமின் யோசனை ஏற்றுக் கொள்ளும் மத்திய அரசு முல்லைப் பெரியாறு விவகாரத்தில் ஏற்றுக் கொள்ள மறுத்து இரட்டைவேடம் போடுகிறது என் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில்,

முல்லைப்பெரியாறு விடயத்தில் மத்திய அரசு மெத்தனத்துடன் செயற்படுகிறது. பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களைவிட கேரளாவில் நடக்க உள்ள இடைத் தேர்தலில் காங்கிரஸ் ஜெயிக்க வேண்டுமே என்ற ஒரே கவலைதான். காங்கிரஸ்கட்சி ஆட்சி செய்யும் கேரளாவுக்கும் மத்திய அரசுக்கும் இரு அரசுகளுக்கும் ஆட்சி பற்றிய கவலைதான் இரு மாநில மக்களைப் பற்றிய கவலை ஒரு துளி கூடக் கிடையாது.

கேரளா சென்ற ஐயப்பமார்களையும் அங்கு வாழ்ந்த தமிழர்களையும் பாதுகாக்கத் தவறிவிட்டது. கேரள அரசு சமூக விரோதிகளால் தமிழர்கள் தாக்கப்படுவதை கேரள அரசு வேடிக்கை பார்க்கிறது.

இந்த இலட்சணத்தில் எத்தனை வரலாற்று சிறப்புமிக்க தீர்மானங்களை நமது சட்டமன்றம் நிறைவேற்றி என்ன பயன்? ஜெயலலிதாவும் கருணாநிதியும் வரலாற்று சிறப்புமிக்க ஊழல்வாதிகள் என்பதுதான் நாம் கண்ட பலன். கூடங்குளம் மக்களின் 120 நாட்கள் போராட்டத்தின் தன்மையை உணர்ந்து பிரதமர் அந்த மக்களை நேரில் சந்தித்து அவர்களது அவநம்பிக்கையை போக்கி இருக்க வேண்டும். அதைச் செய்யாமல் ரஷ்யாவில் போய் நின்று கொண்டு இன்னும் ஒரு வாரத்தில் கூடங்குளம் அணு உற்பத்தி ஆரம்பிக்கும் என்பது முறையல்ல. கூடங்குளம் பாதுகாப்புக்கு இராணுவத்தை ஈடுபடுத்தலாம் என்ற அப்துல் கலாமின் ஆலோசனையை மத்திய அரசு மகிழ்ச்சியாக நிறைவேற்றத் துடிக்கிறது. அதேநேரத்தில் முல்லைப் பெரியாறில் இராணு பாதுகாப்பு அவசியம் என்ற அதே அப்துல் கலாமின் ஆலோசனையை காது கொடுத்து கேட்க மத்திய அரசு மறுக்கிறது. மத்திய அரசின் இந்த இரட்டை வேடம் மக்களை ஏமாற்றும் செயல் என்றார். (அ-2)



கோவா சுதந்திர போராட்ட வீரர் குண்காவின் உருவப்படத் திறப்பு விழா டில்லி பாராளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா, பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி மற்றும் மக்களவை சபாநாயகர் மீரா குமார் ஆகியோர் பங்கேற்றதைப் படத்தில் காணலாம்.

# உத்தர பிரதேசத்தை பிரிக்கும் தீர்மானம் திருப்பி அனுப்பப்பட்டது

(புதுடில்லி)

உத்தர பிரதேசத்தை நான்காக பிரிக்கும் தீர்மானத்தை மத்திய அரசு சில கேள்விகளுடன் திருப்பி அனுப்பி விட்டது. உத்தர பிரதேசத்தை நான்காக பிரித்து அவாத் பிரதேஷ், பூர்வாஞ்சல், புடல்கண்ட், பச்சிம் பிரதேஷ் ஆகிய மாநிலங்களை உருவாக்க வேண்டும் என கடந்த மாதம் அம்மாநில சட்டசபையில் முதல்வர் மாயாவதி தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு பாரதிய ஜனதா உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

நான்கு மாநிலங்களின் எல்லைப் பகுதிகளாக எவை வரையறுக்கப்பட்டுள்ளன? தற்போது உ.பியில் பணிபுரியும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எந்த விதத்தில் மாநிலங்களில் செயற்படுவார்கள்? இந்த மாநிலத்தின் சார்பில் வாங்கப்பட்டுள்ள கடன்கள் எப்படி திருப்பி செலுத்தப்படும்? என்பது உள்ளிட்ட ஒப்பது கேள்விகள் எழுப்பப்பட்டு தீர்மான நகல் உத்தர பிரதேச அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# பாரதச் செய்திகள்



ரஷ்யாவில் பகவத்கீதைக்கு தடைவிதிக்கப்பட்டதை கண்டித்து மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள இஸ்கான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் கண்டன பதாகைகளை ஏந்தி போராட்டம் நடத்துவதைப் படத்தில் காணலாம்.

# சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி மையம்



இந்தியாவில் உலகத் தரத்தில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமெரிக்காவுக்கான இந்திய தூதர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில் வர்த்தக சபை கூட்டமைப்பு சார்பில் இந்திய - அமெரிக்க வர்த்தக கலந்துரையாடல் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அமெரிக்காவுக்கான இந்திய தூதர் நிருபமா ராவ் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறுகையில், அமெரிக்க வைத்திய நிபுணர்களின் உதவியுடன் இந்தியாவில் உலகத் தரத்தில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (அ-2)

# கடும் பனியால் பலர் பரிதாபம்

வட இந்தியாவை கடுமையாக வாட்டி எடுக்கும் கடும் பனிக்கு மேலும் 11 பேர் பலியாகியுள்ளனர். நேற்று பஞ்சாபில் 9 பேரும் உத்தர பிரதேசத்தில் 2 பேரும் பலியானார்கள். இதனையடுத்து பனிக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

கடும்பனி காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. உ.பியின் படேகார்க் பகுதியில் வெப்பநிலை 3.9 டிகிரியாக பதிவானது. பனி காரணமாக டில்லி சர்வதேச விமான நிலையத்திலிருந்து கிளம்ப வேண்டிய விமானங்கள் தாமதமாகின்றன. 40 புகையிரதங்களின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் மாநிலத்தில் வெப்பநிலை மைனஸ்க்கு சென்றுள்ளது. குல்மார்க் பகுதியில் வெப்பநிலை மைனஸ் 6.8 டிகிரி செல்சியசாக பதிவாகியுள்ளது. ஸ்ரீநகரில் மைனஸ் 3.4 டிகிரி செல்சியசாக பதிவாகியுள்ளது. (அ-2)

# டாக்கா பிரிமியர் லீக்: பாக். வீரர்களுக்கு தடை

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெறவுள்ள டாக்கா பிரிமியர் லீக் போட்டியில் விளையாடுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் சிலருக்கு பாகிஸ் தான் கிரிக்கட் சபை தடைவிதித்துள்ளது.

அடுத்த மாதம் டுபாய் மற்றும் அபுதாபியில் நடைபெறவுள்ள இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளுக்கு பாகிஸ்தான் வீரர்கள் தம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே இதற்கான காரணம்.

இங்கிலாந்துடனான சுற்றுப் போட்டிக்கு தெரிவு செய்யப்படவுள்ள வீரர்கள் அனைவரும் பங்களாதேஷில் நடைபெறவுள்ள டாக்கா பிரிமியர் லீக் போட்டிகளில் பங்குபற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊடகப் பேச்சாளர் நதீம் சர்வார் கூறியுள்ளார். அடுத்த மாதம் பாகிஸ்தான் அணி முக்கிய சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ள நிலையில் அவ் வீரர்களின் உடல் ஆரோக்கியம் அச்சுறுத்தலுக்குள்ளாகுவதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரும்பவில்லை. அனைத்து முன்னிலை வீரர்களுக்கும் இது தெளிவான செய்தியாகும் என அவர் கூறியுள்ளார்.

பங்களாதேஷ் உள்ளூர் போட்டியில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்ட வீரர்களின் பெயர்களை குறிப்பிட நதீம் சர்வார் மறுப்புத் தெரிவித்தார்.

எனினும் யூனிஸ்கான், சொஹைப் மலிக், இம்ரான் பர்ஹத், மொகமட் ஹபீஸ், அப்துர் ரஹ்மான், கம்ரன் அக்மால், வஹாப் ரியாஸ், உமர் அக்மல், சொஹைப் தன்வீர், ஆகிய 9 வீரர்கள் வெவ்வேறு கழகங்களில் விளையாடுவதற்கு அழைக்கப்பட்டிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.



லண்டனில் நடந்த பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில், மான்செஸ்டர் சிட்டி அணி 1-0 என்ற கோல் கணக்கில் அர்சனல் அணியை வீழ்த்தியது. பந்தை தட்டிச் செல்ல போராடிய இரு அணி வீரர்கள்.

# கிரிக்கெட் வீரர்களின் ஊதியத்தில் 46 வீதத்தை வழங்கியது ஐ.சி.சி

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றியமைக்காக இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளத்தில் 46 சதவீதத்தை சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) கடந்த 16-ம் திகதி வழங்கியுள்ளதாக கிரிக்இன்போ இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

20 இலட்சம் டொலர் பணத்தை சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு வழங்காமல் வீரர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்பிலிட்டுள்ளதாக தெரியவருவதாகவும் கிரிக்இன்போ தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றியமைக்காக நாடொன்றுக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தில் 25 சதவீதம் வீரர்களுக்கு வழங்கப்படவேண்டும். இதன்படி இலங்கை வீரர்களுக்கு 43 இலட்சம் டொலர் வழங்கப்பட வேண்டியிருந்தது.

இந்த நிலையில் ஒவ்வொரு வீரருக்கும் வழங்கப்படவேண்டிய தொகை மற்றும் வங்கிக் கணக்கு இலக்கங்களை ஐ.சி.சிக்கு சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்திருந்ததாகவும் இக்கொடுப்பனவு குறித்து அறிந்த ஒருவர் தெரிவித்துள்ளார். இக் கொடுப்பனவு தொடர்பான ஏற்பாடுகள் குறித்து சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டொனி ஐரிஸ் கூறியுள்ளார்.

சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் நிதி நெருக்கடி காரணமாக இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு கடந்த 8 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஐ.சி.சி 20இலட்சம் டொலர் வழங்க இணங்கியுள்ளதாகவும் அதன்மூலம் பயிற்றுனருக்கும் வீரர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட முடியும் எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியிருந்தார்.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக அம்பாந்தோட்டை, பல்லேகலவில் இருபுதிய அரங்குகளைநிர்மாணிப்பதற்கும் ஆர். பிரேமதாஸ அரங்கை புனரமைப்பதற்கும் சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனம் பணம் செலவிட்டதை அடுத்து அந்நிறுவனம் 32.5 மில்லியன் டொலர் கடனில் சிக்கியுள்ளதால் நிதிநெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.


வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

யாழ் மக்களுக்கான

Green Wich Business Academy

நிறுவனத்தினரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் அங்கிகாரம் பெற்ற நிறுவனங்களும் இணைந்து நடாத்தும் சவுதி, கட்டார் நாடுகளுக்கான வேலை வாய்ப்பு

நேர்முகத் தேர்வு

21.12.2011 - 22.12.2011

காலை 10.00 மணிமுதல் 4.30 மணி வரை

* Driver சம்பளம் 1200 றியால்

(3YEARS EXPERIENCE AD LICENSE)

வயது எல்லை 24 முதல் 40 வரை

கலந்து கொள்ளும் இளைஞர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

* Housh Mead (Free)

No 235 Palaly Road, Kondavil Junction Jaffna.

தொடர்புகளுக்கு :- 021 567 2727

Greenwich Business Acaddemy

Overseds Consulting and Educution

Student are errolled at a Very Cheap Rate


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சிவபாலன் (பேபி)



மண்ணில்

27
07
1976

விண்ணில்

21
12
2007

ஆண்டுகள் நான்கு ஓடிவிட்டன
ஆனாலும் எம் இதயம் ஆறவில்லை
உம் மனைவி, பிள்ளை நாம்
கதறித் தவிக்கின்றோம்.
அப்பா என்று நீங்கள் வருவீர்கள் என
மகன் திருவரங்கன் திணறித் தவிக்கின்றான்
பேபி நீ இல்லாத வீடு இன்று வெறிச்
சோடிக் கிடக்கிறது.
எமை விட்டு எங்கு தான் சென்றீரோ.

ஐங்கரன் இல்லம்
வடக்கம்பரை, தொல்புரம்.

பிரிவால் துயருறும்
மனைவி: சி. தயளினி
மகன்: சி. திருவரங்கன்

(7003)

யாழ் நகரில் புதிய உதயம்

**Jet D Express** Courier Service

நத்தார் புதுவருட தினத்தை முன்னிட்டு விசேட கட்டணச் சலுகை உண்டு

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய



DHL Available

UK Over 5Kg- 900/= Germany Over 10Kg- 700/=
UK Over 10Kg- 650/= France Over 10Kg- 750/=

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்

Note : கடலுணவு வகைகள், எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும்


இல 27, முதலாம் மாடி, நவீன சந்தை, (குனம் ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம். தொ.பே:- 021 221 9150, 0772187 301

No.77E, Manning Place, Wellawatta, Colombo 6, T.P:- 0112363873 0776509909


# மரண அறிவித்தல்

## கந்தையா கருணாகரன்

(உரிமையாளர் - M.R.M. Rice Mill ஊரெழு)



72/11, செம்மணி வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கருணாகரன் அவர்கள் 18.12.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெனிதன், டிலோஜன், தாரகா, மாதங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 22.12.2011 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

72/11, செம்மணி வீதி, நல்லூர்.
TP:-021 2227051

தகவல்: குடும்பத்தினர்

(7000)


# மது பான்சி கவுஸ்

## மா பெரும் மலிவு விற்பனை

21.12.2011 தொடக்கம்



பிளாஸ்ரிக் கதிரைகள், மெத்தைகள், எவர்சில்வர் பொருட்கள், பேபி மெத்தைகள், கிடாரம் டாம்பரக்கள், தாச்சிகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தக வாக்குகள், பொங்கல் பானைகள் மற்றும் ஏனைய பொருட்கள்.

யாழ் வீதி, மானிப்பாய்.

பிள்ளையார் களஞ்சியம்

(A-5229)


## சுமார் 3 ஆயிரத்து 500 குடும்...

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 2ஆயிரத்து 722 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 384 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அத்தோடு இந்தப் பிரிவில் இதுவரை 53 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேர் இடைத் தங்கல்முகாம்களில்தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 765 பேர்வெள்ளத்தால்பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக இந்த பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொம்மைவெளி, சூரியவெளி, காக்கைதீவு, நாவாந்துறை போன்ற தாழ் நிலப் பகுதிகளில் பெருமளவு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.மேலும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 823 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதில் ஜே/89 கிராம சேவையாளர் பிரிவில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 682 பேரும் ஜே/109 கிராம சேவையாளர் பிரிவில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 141 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 148 குடும்பங்களைச் சேர்ந்த 542 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும் கோயில்களிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் தற்காலிக கூடாரங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவர்களுக்கு சமைத்த உணவும் அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)


## விற்பனைக்கு



சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன டபிள் பட்டன் கொமேட், சிகோ உயர்தர ஏ.சி. மெஷின்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0773 616 798

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி

தமிழ் இலக்கண மீட்டல் வினாவிடை வகுப்பு

A/L 2012, 2013

ஆரம்பம் : 22.12.2011 மு.ப. 10.00

ஆசிரியர் : தமிழிந்திரன்

(C-5233)

## அலுவலகர் தேவை

MyWay இன் நெல்லியடி சாவகச்சேரி. சங்கானை. அச்சுவேலி மற்றும் யாழ்பாணம் அலுவலகங்களில் பணிபுரிய A/L படித்த அல்லது பட்டம் பெற்ற ஆண், பெண் அலுவலர்கள் தேவை

சுயவிபரக்கோவையுடன் 21.12.2011 புதன் இன்று காலை 9 -11 அல்லது மாலை 2-4 யாழ் அலுவலகத்திற்கு நேரில் வரவும்

MyWay English
182, Stanley Rad, Jaffna
077 33 63 456


## இன்று முதல் மூன்று நாட்கள்

# முகிழ் -2011

## ஓவியக்கண்காட்சி

கலைத்துவத்தில் முகிழ்ந்தவர்களின் படைப்புக்களின் புடைப்பு

காலம்: 22, 23, 24 ஆம் திகதிகளில்

தினமும் காலை 10.00 மணிமுதல் மாலை 4மணி வரை கண்காட்சியை பார்வையிடமுடியும்

இடம்: யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்

இன்று 21.12.2011

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
(துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்)
அவர்களால் திறந்து வைக்கப்படுகின்றது.

அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்


ஊடக அனுசரணை www.nationtravels.com

NATION POPULAR TRAVELS & TOURS

இந்தியா சென்றுவர LKR 1600/= மட்டுமே

Hotline 0214 920 920

மாதாந்த கொடுப்பனவு முறை

HNB VISA Cretit card holder only

#82 பிறவுன்வீதி யாழ்ப்பாணம் Tel: 0214 920 505

(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) Fax: 0217 538 325

அனைவரும் கற்கக்கூடிய கட்டணம் MCS இல்

After A/L? Engineering-USA Rs.20,000 Scholorship

BIT University of Colombo Only Rs 15,000 1 year course fee

CIMA 50% Off Rs 14,400 Per Level University & A/L Students

மாணவர்கள் BCS - UK, IELTS, TOEFL, CCNA, Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

Qualified Lectures Panel, Passing Guarantee, 12 Years Experience

Listed college-CIMA UK, Silver Award-Microsoft-USA, Best performance Award-University of colombo

MCS Supported By UNDP/JRRP

324, Palaly Road, Parameswara Junction

Free5 Course fee* Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

SMS Your name & Course to 772395895 & Get Scholorship


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.